DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Realty Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
e-mail: raj.p@rogers.com

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.canadauthayan.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1259 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 22, 2020

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX COMMUNITY

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal; Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600
4158, Kingston Road, Unit 3, Scarborough, ON. M1E 2M4
info@allinoneservices.ca, www.allinoneservices.ca

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

- **உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 5,189,210 ஆக உயர்ந்தது...**
- **உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 334,121 ஆக அதிகரித்துள்ளது...**
- **இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் மாற்றமில்லை...**
- **அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 97,531 ஆக உயர்ந்துள்ளது.**



கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன.

உலகெங்கிலுமான மொத்த இறப்புக்கள்: 5,189,211

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமெரிக்கா: 97.531 | இத்தாலி: 32571 | கனடா: 6238 | இங்கிலாந்து: 36510 | ஸ்பெயின்: 28001 | ஜேர்மனி: 8352 |
| சீனா: 4534 | பிரான்ஸ்: 28323 | ஈரான்: 7326 | இந்தியா: 3724 | இலங்கை: 9 | பெல்ஜியம்: 9245 |

# கனடிய பூர்வகுடிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்குச் சேவையாற்றும் பூர்வகுடி அமைப்புக்களுக்கும் மேலதிக நிதி



பூர்வகுடிச் சமூகங்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்கும், கோவிட்-19 இன் பாதிப்புக்களை எதிர்கொள்வதற்கும் புதிதாகத் தகுதி அடிப்படையிலான 305 மில்லியன் டொலர் பூர்வகுடி சமூக உதவி நிதியம் ஒன்றை அமைப்பதாகக் கனேடிய அரசு மார்ச் 18 ஆந் திகதி அறிவித்தது. நகர்ப்புறங்களிலும், பூர்வகுடிக் குடியிருப்புக்களுக்கு வெளியேயும் வசிக்கும் பூர்வகுடி மக்களுக்குச் சேவையாற்றும் பூர்வகுடி அமைப்புக்களுக்கென இந்தப் பணத்தில் 15 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டது.

நகர்ப்புறங்களிலும், பூர்வகுடிக் குடியிருப்புக்களுக்கு வெளியேயும் வசிக்கும் பூர்வகுடி மக்களுக்குச் சேவையாற்றும் பூர்வகுடி அமைப்புக்களுக்கு மேலதிகமாக 75 மில்லியன் டொலர் வழங்கப்படுவதாகப் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோநேற்று அறிவித்தார்.

ஒட்டாவா மாநகரில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர அங்க தொடர்ந்து உரையாற்றுகையில்

நாடு முழுவதிலும் உள்ள கனேடியர்களுக்குக் கோவிட்-19 தொடர்ந்தும் பாதிப்பு ஏற்படுத்தும் நிலையில், முதற் தேசம் (First Nations), இனுயிட் (Inuit), மேட்டி (Métis) ஆகிய சமூகத்தினரும் சுகாதார, சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்கிறார்கள். பூர்வகுடியினருக்கு, குறிப்பாக அவர்களது குடும்பங்களில் இருந்தும் சமூகங்களில் இருந்தும் பிரிந்திருப்போருக்கு, தனித்துவமான தேவைகள் இருப்பதைக் கனேடிய அரசு புரிந்துகொள்கிறது.

இந்த மேலதிக நிதி, உணவுப் பாதுகாப்பு, மனநல ஆதரவுச் சேவைகள், தூய்மைப்படுத்தல் மற்றும் பாதுகாப்புக் கருவிகள் போன்ற பூர்வகுடி மக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்வதற்கு அதிக சமூக அடிப்படையிலான திட்டங்களுக்கு உதவியளிக்கும். மூத்தோர், போக்குவரத்து, பூர்வகுடிச் சிறுவர்களுக்கும் இளையோருக்குமான கல்விக் கருவிகள் போன்ற ஏனைய தேவைகளுக்கும் இந்தப் பணம் உதவும். இந்தத் திட்டங்களுக்கான பணத்தை வழங்கும் செயற்பாடு எதிர்வரும் வாரங்களில் ஆரம்பமாகும். என்றார் - மே 21, 2020

மேலதிக தகவல்களுக்கும், ஊடகங்களின் கேள்விகளுக்கும்:
டொறீன் சவுந்தரநாயகம்
Gary.Anandasangaree.C1A@parl.gc.ca

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON AD TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# உதயன் சிறு விளம்பரங்கள் CLASSIFIED ADS

உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



**NIRMALAN (ROGER):**
**(416) 990-7777**
**(416) 984-7777**

## BASEMENT FOR RENT

**Morningside / Finch**
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement
அனைத்து வசதிகளுடன்
வாடகைக்கு உண்டு.
Close to TTC & school.

**Call: (416) 666-7742**
**(416) 388-7137**

## சிறுவர், சிறுமிகளின் பொழுதை பயனுள்ளதாக நாம் மாற்றுவோம் !

Art Competition



உதயன்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

## சித்திரப்போட்டி

**தலைப்பு: வீட்டுப் பூந்தோட்டம்**

சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
சித்திரங்கள் கருப்பு வெள்ளையாக அல்லது வர்ணத்தில் அமையலாம்.
தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் உதயன் பத்திரிகையில் பிரசுரமாகும்.
போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு
பெயர், பாடசாலை, தரம், புகைப்படம்
விபரங்களுடன் uthayannews@yahoo.com
மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

**25.05.2020** முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும்

மேலதிக விபரங்கள்க்கு: **416.752.1524**
4062 Ellesmere Road Scarborough, ON M1C 1J2

VJ- Colombo

## CAMSONICS SECURITY SYSTEM INC.

**Special Promotion**

### Camsonics Door Bell

Monitor your front door from anywhere using your mobile device with the 3MP Video Doorbell with Night Vision from Ring. This video doorbell features 1920 x 1080 video, night vision functionality for visibility at night and in low-light conditions, and a 160° field of view. Adjustable motion sensors allow you to select the setting you desire for your home from the comfort of your mobile device via the free Ring app. A built-in microphone and speakers with noise cancellation allow you to listen and respond to those at your front door.

$275.00 NOW $200.00

Limited time offer



**Rajeev :- 647 302 5748**
**Web: www.camsonics.com**
**E-Mail: rajeev@camsonics.com**

## Coming soon to shake hands with you!

நண்பன் WORLDWIDE

**91 784 5006977**

EMAIL: uthayannews@yahoo.com TEL : (416) 752-1524 FAX : (416) 752-6703

# Carefirst Family Health Team

## Accepting New Patients




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam

OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.canadauthayan.ca

உதயன் கதிரோட்டம்

# கொரோனாவை விடக் கொடியது கோட்டாவின் தேர்தல் 'ஆசை'

கொடிய 'கொரோனா'' என்னும் கிருமியினால் உண்டாகும் கோவிட்-19 என்னும் ஆபத்தான நோயின் அபாயம் உலகெங்கும் சூழந்துள்ள இந்த வேளையில் உலகில் கனடா ஜேர்மனி இங்கிலாந்து போன்ற நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் தங்கள் முழுநேர வேலையாகவே மக்களின் நல் வாழ்வுக்காக தங்கள் ஒவ்வொரு நாளையும் அர்ப்பணிக்கின்ற நற்செய்திகள் எங்கள் காதுகளை வந்தடைந்த வண்ணம் உள்ளன. அவற்றின் உண்மைத் தோற்றங்களை நாம் தொலைக் காட்சிகளில் பார்த்து மகிழந்து அந்தந்த தேசங்களின் தலைவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றோம். இந்த வகையில் கனடாவில் வாழும் பல்லின மக்கள் நிதர்சனமாகவே நல்லதோர் ஆட்சியும் நல்லதோர் தலைவனும் எமக்கு கிட்டியுள்ளார். நல்லதோர் நாட்டில் நாம் வாழக்கிடைத்த வாய்ப்பு ஒரு பெரிய வரப்பிரசாதமே என்று மகிழ்ச்சி பொங்க வார்த்தைகளைப் பகிர்ந்து வருகின்றோம்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் அனைத்துமே தலை கீழாக உள்ளதோ என்று எண்ணுகின்ற வகையில் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் எமக்கு சஞ்சலத்தை ஏற்படுத்துகின்றன.

இலங்கையில் பொதுத்தேர்தலை விரைவாகவே நடத்தி, அதன் மூலம் தானும் தனது சகோதரர்கள் புடைசூழ அந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றி, அதன் மூலம் ஒரு இராணுவ ஆட்சியை நடத்தும் அங்கீகாரத்தைப் பெற்றுவிட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபாய இராஜபக்ச □நோயின் பாதிப்பு வருவதற்கு முன்னரேயே எண்ணியபடி தனது காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார். ஆனால் கொரோனாவின் அகோரம் ஓங்கி எழுந்து நிற்கையில் அவரது எண்ணம் ஈடேறவில்லை.

இப்போது தேர்தலை நடத்தலாம் என்று ஜனாதிபதியும் அவரது சகாக்களும் கங்கணம் கட்டி நிற்கையில் தேர்தல் ஆணைக்குழு அதற்கு இணங்காமல் மறுப்புத் தெரிவித்து வந்தது. இதனால் கொரோனா என்று கூறி தேர்தலை ஒத்திவைக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என ஜனாதிபதியின் செயலாளர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரோமேஸ் டி சில்வா, உயர்நீதிமன்றில் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் பிரதம நீதியரசர் தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று 4ஆவது நாளாகப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட போதே அவர் இந்த வாதத்தை முன்வைத்தார்.

தேர்தல் ஆணையக்குழு தொடர்ந்து தேர்தலை ஒத்திவைக்க முடியாது.கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாகக் கூறி, தேர்தல் ஆணைக்குழு ஒரு சுகாதாரப் பாதுகாப்பு முறையை வகுத்து தேர்தல்களை நடத்த கவனம் செலுத்தவேண்டும். என்று அவசரப்படுத்தும் வகையில் தனது வாதங்களை ஜனாதிபதியின் சார்பாக எடுத்துரைத்தார்

ஆனால், சர்வதிகார போக்குக்கு எதிராக ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நோக்கில், முன்னர் நிறுவப்பட்ட சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுக்களின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்கின்ற அதே வேளையில், இதன் நடுநாயகமாக தேர்தல் ஆணையகமும், அதன் மூன்று அங்கத்தவர்களும் செயற்படுவதை இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளே அவதானிக்கின்றன.

மேற்படி மூன்று அங்கத்தவர்களில் ஒருவரான, பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் எந்தவொரு கட்சிக்கும் சார்பாக செயற்படவில்லை என்று தெரிந்தும் ஜனாதிபதியின் அணியினர் அவர் குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றார் என்று கூறிவருவதைக் காணமுடிகின்றது

நாடு திரும்பியுள்ள, பேராசிரியர் ரத்னஜீவன் ஹூலின் புதல்வி, தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார். இதை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு, ரத்னஜீவன் ஹூலின் மீது புதிய அழுத்தங்கள் செலுத்தப்படுகின்றன. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பயணத்தில் வீதி தடைகளில் அவருக்கு தொல்லைகள் பல கொடுக்கப்பட்டுள்ளன. அவரையும் 21 நாள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கி முடக்க அரசாங்கம் திட்டமிடுவதாக தெரிகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கையில் கோட்டபாய அணியினருக்கும் உடனடித் தேவைகள், தேர்தலில் வெற்றி, நீண்ட கால ராஜபக்ச ஆட்சியை உருவாக்கி மகிழ்தல், சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலைமையை திணித்து மறைமுகமான இராணுவ ஆட்சியை நடத்துவது. இவைதான் இந்த தேர்தல் 'ஆசை' க்கு பின்னால் உள்ள இரசசியம் என்று தான் கருதவேண்டியுள்ளது.

## மோட்டார் சைக்கிளை பின்புறமாக விமானப்படை அம்புலன்ஸ் மோதியதால் ஸ்தலத்தில் கணவன் பலி! மனைவி படுகாயம்

யாழ்ப்பாணம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பளை தம்பகாம் பகுதியில் விமானப்படையின் அம்புலன்ஸ் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். அவரது மனைவி படுகாயமடைந்திருக்கின்றார்.

நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் இந்த சோகச் சம்பவம் நடைபெற்றது. தம்பதியர் பிரதான வீதியிலிருந்து வலது பக்கம் நோக்கித் திரும்ப முற்பட்டவேளை பின்னால் வந்த அம்புலன்ஸ் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

விபத்துக்குள்ளானவர்கள் இருவரும் நாவற்குளியைச் சேந்தவர்கள் எனவும் கணவரான அந்தோனி அஞ்சலோ என்னும் 51 வயதுடையவரே சம்பவஇடத்தில் உயிரிழந்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் இளம் பெண் சட்டத்தரணியை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட இராணுவத்தினர்

யாழ்ப்பாணத்தில் பெண் சட்டத்தரணி ஒருவரை வழிமறித்து அவரை இராணுவத்தினர் அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டுள்ள சம்பவெமான்று இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இது குறித்து கூறப்படுவதாவது:-

யாழ்ப்பாணத்தை சேர்ந்த கனிஸ்ட பெண் சட்டத்தரணி தனது சிரேஸ்ட சட்டத்தரணியின் அலுவலகத்தில் கடமைகளை முடித்துக்கொண்டு இரவு 7 மணியளவில் வீடு திரும்பிய போது வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் குறித்த பெண் சட்டத்தரணியை மறித்து சோதனையிட்டுள்ளனர். இதன்போது தான் சட்டத்தரணி என , தனது அடையாள அட்டையை அவர் இராணுவத்தினரிடம் காண்பித்த பின்னரும் அவருடைய கைப்பையை தாம் சோதிக்க வேண்டும் என கோரிய இராணுவத்தினர் கைப்பையினுள் இருந்த பொருட்களை வீதிகளில் கொட்டி , கைப்பையை சோதனையிட்ட பின்னர் வீதியில் கொட்டப்பட்ட பொருட்களை பொறுக்கி எடுத்து செல்லுமாறு கூறியுள்ளனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த பெண் சட்டத்தரணி , வீதியில் சிந்தப்பட்ட பொருட்களை எடுக்காமல், தனது கைப்பையை மட்டும் இராணுவத்தினரிடமிருந்து வாங்கி சென்றுள்ளார்.

இராணுவத்தினரின் இந்த அநாகரிக செயற்பாடு குறித்து நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சிரேஸ்ட சட்டத்தரணிகள் ஆலோசித்து வருவதாக அறிய முடிகிறது.இது இவ்வாறிருக்க, கடந்த சில தினங்களாக மாலை வேளைகளில் பல இடங்களில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதி சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஏழையின் சிரிப்பில் அடங்கியதோ கோரோனா?

*தோற்றுப் போய்விடும்*
*கோரோனா*
*இந்தக் குழந்தையின்*
*சிரிப்பில்...*
*வறுமையும் வாட்டமும்*
*வெய்யிலும் மழையும்*
*என்ன தான் வஞ்சகம்*
*இழைத்திட்டாலும்*
*தோற்றுத் தான்*
*போயிடும் அனைத்துமே*
*இந்த சின்னவனின்*
*சிரிப்பில்*



உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும்,
திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.
NEED HELP
WITH YOUR
TAXES?
WE GOT YOU
COVERED!!
- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca
MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1
ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

# கனேடிய சிறு வணிக நிறுவனங்கள் வட்டியில்லாக் கடன்களைப் பெறுவதற்கு ஏதுவாக நேற்று பிரதமர் அறிவித்துள்ள மாற்றங்கள்





இந்த உலகத் தொற்றுநோய் வேளையில் கனேடியர்களைப் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதிலும், குடும்பங்கள் செலவினங்களை மேற்கொள்வதற்கு உதவியாக நடுத்தர வகுப்பு வேலைவாய்ப்புக்களைப் பாதுகாப்பதற்குப் பலமான நடவடிக்கைகளை எடுப்பதிலும், வணிக நிறுவனங்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளிலும் கனேடிய அரசு கவனம் செலுத்துகிறது.

உரிமையாளர்களே இயக்கும் (owner-operated) சிறு வணிக நிறுவனங்களில் பல கனடா அவசர வணிகக் கணக்குக்குத் (Canada Emergency Business Account (CEBA)) தகுதி பெறுவதற்கான விதிகளைத் தளர்த்துவதாகப் பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ இன்று அறிவித்தார். இந்த விரிவாக்கம், கனேடியர்கள் தங்கியிருக்கும் வேலைவாய்ப்புகளைப் பாதுகாப்பதற்கு சிறு வணிக நிறுவனங்களுக்கு உதவும்.

உலகத் தொற்றுநோய் காரணமாக வருமானம் குறைவடைந்துள்ள கால கட்டத்தில் செயற்படு செலவினத்தை ஈடு செய்வதற்கு மேலும் அதிகமான கனேடிய சிறு வணிக நிறுவனங்கள் வட்டியில்லாக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு CEBA வில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் உதவியளிக்கும். தமது வணிக நிறுவனங்களிடம் இருந்து நேரடியாக வருமானத்தைப் பெறும் உரிமையாளர்கள், ஒப்பந்தகாரர்களில் தங்கியிருக்கும் வணிக நிறுவனங்கள், சம்பளப் பட்டியலின் மூலம் அன்றி, லாபத்திலிருந்து பணியாளர்களுக்குப் பணம் வழங்கும் குடும்பங்களுக்குச் சொந்தமான நிறுவனங்கள் என்பவற்றில் பெரும் எண்ணிக்கையானவை இனிவரும் காலத்தில் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

விரிவாக்கப்பட்ட விதிகளின் கீழ் தகுதி பெறுவதற்கு, 20,000 டொலரிலும் குறைவான மொத்தச் சம்பளங்களை வழங்கும் விண்ணப்பதாரிகளுக்கு:

- திட்டத்தில் பங்கேற்கும் நிதி நிறுவனத்தில் வணிகக் கணக்கு ஒன்று இருக்கவேண்டும்.

- கனடா வருமானவரி முகவரக வணிகக் கணக்கு இலக்கம் இருப்பதுடன், 2018 அல்லது 2019 ஆம் ஆண்டுக்கான வரிக் கணக்கை அவர்கள் சமர்ப்பித்திருக்கவேண்டும்.

- ஒத்திவைக்க முடியாத செலவினங்கள் 40,000 டொலர் முதல் 1.5 மில்லியன் டொலர் வரையாக இருக்கவேண்டும். தகுதியுள்ள ஒத்திவைக்க முடியாத செலவினங்களில் வாடகை, வருமான வரி, பயன்பாடுகள், காப்புறுதி போன்றன உள்ளடங்கலாம்.

செலவினங்கள் கனேடிய அரசின் சரிபார்ப்புக்கும், கணக்காய்வுக்கும் உட்படுத்தப்படும். நிதி நிறுவனங்களின் பங்களிப்புடன் பணம் வழங்கப்படும். புதிய தகைமைகளின் கீழ் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியை உள்ளடக்கிய மேலதிக விபரங்கள் எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும்.

இதுவரை 600,000 இற்கும் அதிகமான சிறு வணிக நிறுவனங்கள் ஊநுடீயு வைப் பெற்றுள்ளன. வணிக வங்கிக் கணக்கைப் பயன்படுத்தாது தனிப்பட்ட வங்கிக் கணக்கைப் பயன்படுத்தும் வணிக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும், இதுவரை வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பிக்காத புதிய வணிக நிறுவனங்கள் போன்றவற்றுக்கும் உதவியளிப்பதற்கான வழிகளைக் கண்டறிய இது அரசு செயலாற்றும்.

கனேடியர்களுக்கும், நடுத்தர வகுப்பு வேலைவாய்ப்புகளுக்கும் முன்னுரிமை வழங்கும் கனேடிய அரசின் கோவிட்-19 பொருளாதார திட்டத்தின் ஒரு அங்கமாக இது அமைகிறது.

கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான எல்லை மூடப்பட்டமை மேலும் 30 நாட்கள் நீடிக்கப்படுவதாகப் பிரதம மந்திரி மேலும் அறிவித்தார். இரண்டு நாடுகளினதும் மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடனான முடிவின் ஒரு பகுதியாக இது அமைகிறது.

மேலதிக தகவல்களுக்கும், ஊடகங்களின் கேள்விகளுக்கும்:
டொறீன் சவுந்தரநாயகம் மே 12, 2020
**Gary.Anandasangaree.C1A@parl.gc.ca**

# கொரோனா பரவலை தடுக்க முடியவில்லை: தடுமாறும் மத்திய அரசு... தள்ளாடும் மாநில அரசு...



சர்வமும் கொரோனா மயமாகி விட்ட உலகத்தில் மூன்றே மாதத்தில் மூன்றே கால் லட்சம் உயிர்கள் காவு வாங்கப்பட்டு விட்டன. இன்னும் எத்தனை உயிர்களோ? தினம் தினம் இதே நினைப்பில் நிம்மதியை தொலைத்து விட்டனர், மக்கள்.

கொரோனா பாதிப்பில் பிறநாடுகளை ஒப்பிடும் போது, இந்தியாவின் நிலை பரவாயில்லை என்று நினைத்திருந்தோம். ஆனால் சமீப நாட்கள் அதைப் பொய்யாக்கி வருகின்றன. மொத்த பாதிப்பு எண்ணிக்கையில் சீனாவைத்தாண்டி விட்டது, இந்தியா.

இந்தியாவில் மராட்டிய மாநிலம் பாதிப்பில் முந்தி நிற்க, பின் தொடர்கிறது, தமிழகம்.

கை கழுவுதல், முகக்கவசம், சமூக இடைவெளி இவற்றோடு, ஊரடங்கு மட்டுமே இப்போதைக்கு கொரோனாவில் இருந்து நம்மைப் பாதுகாக்கும் என்று அரசாங்கம் சொன்னது. மக்களும் கேட்டனர்.

பசியை மிஞ்சிய கொடுமை உண்டா?

ஆனால் இடைவிடாத ஊரடங்கை எத்தனை காலம் தான் தாங்கமுடியும்? பசியை மிஞ்சிய கொடுமை ஏது? வேலையும் இல்லை சோறும் இல்லை என்ற நிலையில், வீடுகளுக்குள் முடங்கி இருக்கமுடியாமல், மக்கள் தெருவுக்கு வந்து விட்டனர். அரசாங்கமும் தளர்வுகளை அறிவித்து சற்றே ஒதுங்கி விட்டது.

கொரோனா, இந்தியாவில் தலைகாட்டத் தொடங்கிய வேளையில், பிரதமர் மோடி டெலிவி'னில் தோன்றி, 21 நாள் தேசிய ஊரடங்கை அறிவித்தார். அப்போது அவர், "மகாபாரத யுத்தம் 18 நாளில் முடிவுக்கு வந்தது. இந்த 21 நாள் ஊரடங்கு யுத்தத்தின் முடிவில் கொரோனாவை வெல்வோம்" என்று பேசினார். ஆனால், ஊரடங்கு 2.0, 3.0, 4.0 என நீண்டு கொண்டு போகிறதே தவிர கொரோனா யுத்தம் முடிவுக்கு வருமா என்ற கேள்வியுடனே நாட்கள் நகர்ந்து கொண்டு இருக்கின்றன.

60 நாட்கள் ஓடிவிட்ட நிலையில் சாமானியர்களின் துயர்துடைக்க, மத்திய-மாநில அரசுகள் என்ன செய்தன என்று பார்த்தால் உருப்படியாக ஒன்றும் இல்லை என்றே சொல்லவேண்டும்.

மத்திய அரசு செய்தது என்ன? கொஞ்சம் உணவு தானியம், ஜன்தன் வங்கிக்கணக்கில் தலா 500 ரூபாய் பணம், உஜ்வாலா திட்டத்தில் கியாஸ் இணைப்பு பெற்றவர்களுக்கு இலவச சிலிண்டர் அவ்வளவு தான். இது போக, கை தட்டியது, விளக்கு ஏற்றியது (கூடவே பட்டாசு வெடித்து தீபாவளி கொண்டாடியது), விமானத்தில் இருந்து மலர் தூவியது இவற்றையும் சொல்லிக் கொள்ளலாம்.

தமிழக அரசு அதன் பங்குக்கு அரிசி கார்டு வைத்திருப்பவர்களுக்கு தலா ரூ.1,000 வழங்கி, 2 மாத ரேசன் பொருட்களை விலையின்றி வழங்கியது. இதற்கு மேல் தருவதற்கு ஒன்றுமில்லை என்று மவுனமாக வேடிக்கை பார்த்து வருகிறது.

கொரோனாவோடு வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை.

கொரோனாவுக்கு முன்பே ஊசலாடிய பொருளாதாரத்தை, ஊரடங்கு அடியோடு கொன்று விட்டது. இனி என்ன தான் வழி என்று தெரியாமல், மத்திய மாநில அரசுகள், "கொரோனாவோடு வாழப்பழகிக்கொள்ளுங்கள்" என்று கூறி விட்டு, மூடிய கதவுகள் ஒவ்வொன்றையும் திறந்து கொண்டு இருக்கின்றன. அதிலும், தமிழக அரசு விழுந்தடித்துக்கொண்டு திறந்தது, டாஸ்மாக் (மதுக்கடை) கதவு தான். உயர்நீதிமன்றம் மூடச்சொன்ன கதவுகளை உச்சநீதிமன்றத்தின் துணையோடு திறந்து, கல்லா கட்டிக்கொண்டு இருக்கிறது.



கொரோனா சிறப்பு பொருளாதாரத் தொகுப்பு என ரூ.20 லட்சம் கோடிக்கு மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் அறிவித்தார். கண்ணுக்குத்தெரியாத கொரோனா வைரஸ் போலவே அமைந்திருக்கிறது, அந்த நிதித்தொகுப்பு. கடிபட்டு அடிபட்டுக்கிடப்பவனுக்கு மருந்து போட்டு மயக்கம் போக்கி பசியாற்றுவதற்குப் பதில் தற்சார்பு பொருளாதாரம் என தனியார் மய உரையாகவே அது பார்க்கப்படுகிறது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உதவுவது தொடர்பாக மத்திய அரசிடம் திட்டவட்டமான எந்தத் திட்டமும் இல்லை. அவர்கள் சொந்த ஊர்போய்ச்சேருவதற்கு அரசின்போக்குவரத்து வசதிகள் கிடைக்காத நிலையில் "கால்நடை"களாக, பரதேசிகளாகத் திரிவது,காலில்செருப்பு கூட இல்லாமல் ரத்தம் தோய்ந்த கால்களுடன் நடப்பது சக மக்களுக்கு வலிக்கிறது அரசின் பார்வையில் மட்டும் விழ மறுக்கிறது. இந்தியாவின் மக்கள் தொகை 130 கோடி என்றால் அதில் புலம்பெயர் தொழிலாளர்கள் எண்ணிக்கை மட்டும் சில கோடிகள் இருக்கும். இவர்களின் வாழ்வாதாரம் பற்றி மத்திய அரசு பாராமுகமாக இருப்பது ஏனோ தெரியவில்லை.

கொரோனாவை வெல்வது இருக்கட்டும் பொருளாதாரத்தை கொஞ்சம் எட்டிப்பார்ப்போம் என்று மத்திய அரசு நினைப்பது போல் தெரிந்தாலும் அதிலும் தடுமாற்றமே தென்படுகிறது. 2 வாரங்களுக்கு முன், ஜூன் மாதத்தில் பயணிகள் ரெயில் போக்குவரத்து தொடங்கப்படும் என்று அறிவிப்பு வெளியான அடுத்த சில நாட்களிலேயே ஜூன் இறுதி வரை ரெயில் போக்குவரத்து கிடையாது என்று மறுஅறிவிப்பு வந்தது. இப்போது மீண்டும் புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டு ஜூன் 1 முதல் ரெயில்கள் ஓடும் என்றுசொல்லி முன்பதிவையும் தொடங்கி விட்டார்கள். அத்துடன், வருகிற 25-ந்தேதி முதல் உள்நாட்டு விமான சேவையும் தொடங்கும் என்ற அறிவிப்பு வந்திருக்கிறது.

ஜூன் முதல் வாரத்தில் கோவில்களை திறக்கலாம் என்று ஒரு அறிவிப்பும், அடுத்த நாளே இல்லை இல்லை என்ற மறுஅறிவிப்பும் வருகின்றன.

மத்திய அரசின் தடுமாற்றங்கள் இப்படி இருக்கையில், தமிழகத்தை ஆளும் மாநில அரசின் அறிவிப்பில் தள்ளாட்டம் தான் தென்படுகிறது. தள்ளிப்போடப்பட்ட எஸ்எஸ்எல்சி தேர்வுகள் ஜூன் 1-ந்தேதி தொடங்கி 15-ந்தேதி முடியும் என்று கல்வி அமைச்சர் செங்கோட்டையன் முதலில் அறிவித்தார். போக்குவரத்து முழுமையாக முடக்கப்பட்டு, ஊரடங்கும் மே 31-ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில்,நோய்த்தொற்று பரவலும் கட்டுப்படுத்தப்படாத சூழலில் தேர்வுகள் சாத்தியமா என்று எதிர்க்கட்சிகள் கேட்டன. உடனே, ஜூன் 1-ந்தேதி எஸ்எஸ்எல்சி தேர்வுகள் தொடங்காது 15-ந்தேதி தான் தொடங்கும் என்று அரசு அறிவித்து விட்டது. பொது போக்குவரத்து தொடங்குவதிலும் மாநில அரசு முடிவு எடுக்க முடியாமல் ஊசலாட்டத்திலேயே உள்ளது.

இனி எல்லாம் கொரோனா கையில்...

ஆக, "அவரவர் வாழ்வு அவரவர் கையில்" என்ற நிலையில் மக்களே அடுத்த கட்டத்தைப் பற்றி சிந்தித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு கொரோனா தான் இனி கருணை காட்டி விடை பெற்றுச் செல்லவேண்டும்.

*- மணிராஜ், திருநெல்வேலி - தமிழகம்*

# பிரபாகரன் அவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தைத் தேர்ந்தெடுத்ததில் என்ன பிழையிருக்கின்றது?

**- முன்னாள் வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரன்**




முன்னாள் வடக்கு மாகாண சபையின் முதல்வரும், தற்போதைய தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அவர்களிடம் ஊடகவியலாளரால் வாராவாரம் கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு அவர் பதில் அளிக்கும் சிறப்பு ஏற்பாட்டின் படி, இந்த வாரம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களில் அவர் மிக முக்கியமான விடயங்களை, பதில்களாக கூறியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவற்றுள் அவரது பதில்களில், ஒரு சந்தர்ப்பத்தில்" எமது தமிழ் மக்கள் தமக்கு ஈழம் கிடைக்கும்வரை போராடவேண்டும் என்ற கருத்தை க. வி. விக்கினேஸ்வரன் வெளியிட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இவ்வாரத்திற்குரிய கேள்விகளும் முன்னாள் முதல்வரின் பதில்களும் பின்வருமாறு உள்ளன.

1. கேள்வி: பிரபாகரனின் ஆயுதப் போராட்டம் சரியானது என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

பதில்: 1976ம் ஆண்டு மே மாதம் 14ந் திகதி அன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் கடைசிப் பந்தியைப் பார்த்தீர்களானால் அதில் கிட்டத்தட்ட பின் கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது -

"இந்த மகாநாடானது தமிழ் தேசத்திடம் ஒரு பொதுவான வேண்டுதலை விடுக்கின்றது. முக்கியமாகத் தமிழ் இளைஞர்களிடம் எமது சுதந்தரத்திற்கான புனிதப் போரில் தம்மை முற்றாக ஈடுபடுத்துமாறு வேண்டுவதுடன் இறைமையுடைய தமிழ் ஈழம் என்ற இலக்கை அடையும் வரையில் பின் வாங்காது போரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகின்றது".

அன்றைய கால தமிழ்த் தலைவர்களின் வேண்டுகோளில் "புனிதப் போர்" என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறித்த போர் அஹிம்சை வழியிலோ, சத்தியாக் கிரகம் மூலமோ, அரச தந்திரம் மூலமோ நடைபெற வேண்டும் என்று அடையாளப்படுத்தப்படவில்லை.


2. கேள்வி: ஆகவே தம்பி பிரபாகரன் அவர்கள் குறித்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தைத் தேர்ந்தெடுத்ததில் என்ன பிழை?

பதில்: நாம் அஹிம்சையில் நாட்டம் கொண்டவர்கள் என்ற முறையில் ஆயுதப் போராட்டத்தைக் குறை கூறவோ, கொச்சைப்படுத்தவோ எமக்கு எந்த உரித்தும் இல்லை. தம்பி பிரபாகரன் அப்போதைய தமிழ்த் தலைவர்கள் கோரியதைத் தான் முழுமூச்சுடனும் நம்பிக்கையுடனும் நடைமுறைப்படுத்தினார். அதைப் பிழையென்று இன்று நாம் கூற எமக்கு எந்த உரித்தும் இல்லை. மகாபாரதம் நிலத்திற்கான போர் பற்றிக் கூறுவது. பகவான் கிரு'ணரே ஆயுதப் போராட்டத்தை முன்னின்று நடத்தனார். அன்பு வழியை நாடும் நாங்கள் பகவான் கிரு'ணன் சென்ற தூதையும் கவனிக்க வேண்டும். ஊசி குத்தும் இடங் கூடத் தர முடியாது என்றதன் பிற்பாடு தான் போர் தொடங்கியது. ஆகவே தம்பி பிரபாகரனின் ஆயுதப் போராட்டம் அன்றைய தமிழ்த் தலைமைகளின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த நடத்தப்பட்ட போர் என்பதே எனது கருத்து.

3. கேள்வி: தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்'வைச் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து ஆராய்ந்துள்ளனர். இது குறித்து தாங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: மக்களிடையே அவர்களின் மதிப்பு குறைந்துவரும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் இன்னமும் உயிரோடு இருப்பதாக மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக இவ்வாறான மலிவான தந்திரங்களை நாடுவது வழக்கம். எமக்கு அவை தேவையில்லை. எமது மக்களுக்கான தீர்வுகளை பெற்றுத் தருவதில் கூட்டமைப்பினர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள் என்பது உண்மையில்லை. 2015ம் ஆண்டில் பதவியில் இருந்த அரசாங்கத்துடன் அவர்கள் பேசியிருக்க வேண்டும். நாம் 15 பேர் இருக்கின்றோம். நாம் இப்போது உங்களுக்கு ஆதரவு தந்து கொண்டிருக்கின்றோம். நீங்களும் பதிலுக்கு எமக்கு ஆதரவு நல்க வேண்டும். இம்முறை உங்கள் வரவு செலவுத் திட்டத்திற்கு (Budget) நாம் சார்பாகத் தான் வாக்களிப்பதாக உத்தேசம். ஆனால் அதற்கு முன்னர் எமது தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும். முன்னர் JVP யினருக்கு செய்ததைத் தான் நாங்கள் கோருகின்றோம். புதிதாக எதுவும் கோரவில்லை. இதனை நீங்கள் செய்யாவிட்டால் வரவு செலவத் திட்டத்திற்கு சார்பாக நாம் வாக்களிக்க முடியாமல் போய்விடும் என்றிருக்கலாம். வரவு செலவத் திட்டத்திற்கு அது பலிக்காது இருந்திருந்தால் அரசாங்கம் எப்போது எமது 15 உறுப்பினர் வாக்கு அவசியம் என்று கருதியிருந்தார்களோ அப்போது இதைச் செய்திருக்க வேண்டும். இவ்வாறு தமிழ் மக்களிற்கான பல விடயங்களை கூட்டமைப்பு செய்யாமல் தவறிழைத்து விட்டது.

# கிளிநொச்சியில் நேற்று காலை முதல் வீசிய பலத்த காற்றினால் பூநகரி போன்ற பகுதிகளில் மின் கம்பங்கள் முறிந்து வீழ்ந்தன





கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமையன்று காலை முதல் வீசிய பலத்த காற்றினால் பூநகரி, குடமுருட்டி பகுதியிலுள்ள மின் கம்பங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட பல கிராமங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இந்த சேதங்களை திருத்தியமைக்க குறைந்தது ஒரு வாரம் எடுக்கலாம் என்று இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

இதில் மிகவும் உயரமான இந்த மின்கம்பங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன என்றும் இந்த கம்பங்களின் ஊடாக உயர் அழுத்த மின்சார கடத்திகளும் தாழ்வு அழுத்த மின்சாரக் கம்பிகளும் பல கிராமங்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்தன என்றும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

அத்தோடு, கிளிநொச்சி இரத்தினபுரம் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக காணப்பட்ட பாரிய பாலை மரமொன்று முறிந்து வீழ்ந்ததை தொடர்ந்து, இரண்டு மின் கம்பங்கள் சேதமடைந்தமையால் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கான மின்சாரம் முற்றாக தடைப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்து இரண்டு லாறிகளும் சேதமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் போக்குவரத்தும் தடைப்பட்டமையால், பிரதேச மக்கள் ஒன்றிணைந்து வீழ்ந்த மரத்தை அகற்றியுள்ளனர். எனினும் தொடர்ந்து பெருந்தெருக்கள் திணைக்களத்தின் அதிகாரிகளும் அங்கு வந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்ததாகவும் அறியப்படுகின்றது.

# தமிழ்நாட்டின் திருவண்ணாமலையில் உள்ள ஈழத் தமிழர்கள் முகாம் வாழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிய கனடிய வர்த்தக அன்பர்கள்






நேற்று முன்தினம் புதன்கிழமை, தமிழ்நாட்டின் திருவண்ணாமலையில் உள்ள ஈழத் தமிழர்கள் முகாம் வாழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி தங்கள் மனிதநேயத்தைக் காட்டியுள்ளார்கள் கனடாவில் இயங்கும் "எம் கடமை" என்னும் அமைப்பும் கனடிய வர்த்தக அன்பர்கள் சிலரும்.

திருவண்ணாமலையிலுள்ள கொண்டம் இலங்கைத்தமிழர்கள் முகாமிற்கும் அத்துடன் அதே மாவட்டமான திருவண்ணாமலை அடியண்ணாமலை முகாம் மக்களுக்கும் கொரோனா நிவாரண உணவுப் பொருட்களை முகாம் மக்களுக்கு அங்குள்ள பிரதிநிதிகள் நேரடியாக வழங்கினார்கள். இந்த உதவி வழங்கும் போது எடுக்கப் பெற்ற படங்கள் இங்கே காணப்படுகின்றன. கனடவில் இயங்கும் எம் கடமை அமைப்பும் கனடாவில் வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி அவர்களின் வைபரண்ட் கொஸ்பிராலிட்டி குரூப் என்னும் நிறுவனமும் இணைந்து இந்த உதவிகளுக்குரிய நிதியை அனுப்பிவைத்தனர்.

இவர்கள் இதற்கு முன்னரும் இவ்வாறான மனிதாபிமான உதவிகளை இலங்கையில் வடக்கு கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கும் வழங்கியுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: பிரகாஸ்)

# தமிழீழ கனவை சுமந்துபடி வாழ்ந்த தேசப்பற்றாளன் சுரேஷ்




கனடாவில் ஒட்டாவா மாநகரில் தனது குடும்பத்தினரோடு மகிழ்ச்சியோடும் தமிழ்த் தேசிய உணர்வோடும் வாழ்ந்த தம்பிராசா சுரேந்திரன் (சுரேஷ்) அவர்கள் கடந்த 15ம் திகதி அகால மரணத்தைத் தழுவினார்.

90களின் ஆரம்பத்திலிருந்தே கனடாவில் தமிழ்த்தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்திய உலகத்தமிழர் அமைப்பில் தன்னை இணைத்து பணியாற்றினார்.
கனடியத் தலைநகர் ஒட்டாவா பிரதேசத்துக்கு பொறுப்பாளராக நீண்ட காலம் பணியாற்றி வந்த இவர், தமிழ்த் தேசியத்தின் நெருக்கடியான காலகட்டமான 2005-2009 காலப்பகுதியில் அரசியற் துறையில் இணைந்து மிகவும் கடுமையாக உழைத்தவர். தான் பிறந்த மண்ணையும், மொழியையும் மிகவும் ஆழமாக தமது உயிர் இருக்கும் வரை நேசித்த ஒரு தேசப்பற்றாளர் இவர். ஒட்டவாவில் தமிழ் கல்விப்போதனை, மகளிர் அமைப்பு ஆரம்பம் மற்றும் தாயக இளம் சிறார் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தும் முன்னோடியாக தம்மை அர்ப்பணித்த சுரேஸ் 2004ம் ஆண்டு ரொறன்ரோ குயின்ஸ்பார்க் திடலில் இடம்பெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் பிரதான செயற்பாட்டாளராக இயங்கியவர்.

அக்காலப் பகுதியில் விசேட அழைப்பின் பேரில் வன்னிக்குப் பயணம் மேற்கொண்டு நவீன கணி னிமயப்பட்ட ஒளிப்படத்துறையை தேசியத் தலைமைத் தளத்தில் அறிமுகம் செய்த இவரது பணி இன்றும் மதிக்கப்படுகிறது.

கணினித்துறையில் தேர்ச்சி பெற்ற இவர் கணினி தொழில்நுட்ப உதவிகளையும் தேசியத்திற்கு வழங்கி வந்தார். தமிழ்த் தேசியம் என்றமையப் புள்ளியில் நின்றவாறு உலகளாவிய ரீதியில் அதனோடு இணைந்த அனைத்து தேசப்பற்றாளருடனும் நேசமாக இணைந்து இயங்கிய ஒரு முன்னோடி.



அவர் தான் பிறந்த நாட்டைப்போலவே புகுந்த மண்ணான கனடாவையும் இறுதிவரை நேசித்தவர். இயற்கையாகவே பிறரை நேசிக்கும் சுரேஸ் யார், எவர் என்று அறியாதவர்களை காப்பாற்றச் சென்று தமது இன்னுயிரை ஈந்த ஒரு வீரன். 15.05.2020 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் வீதியில் ஏற்பட்ட வாகன விபத்து ஒன்றில் உதவுவதற்காக தனது வாகனத்திருந்து மனைவியுடன் இறங்கி உதவும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

5 பிள்ளைகளின் தந்தையான 52 வயதுடைய சுரேஷ் யாழ்ப்பாணம் புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கனடாவில் 30 வருடங்களுக்கு மேலாக வசித்து வந்தவர். ஒட்டாவா மாநிலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்ட ஆதரவு தளத்தை விதைக்கவும் தமிழ்த் தேசியத்தை கட்டியெழுப்பவும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளராகச் 2009 ஆண்டு வரை தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றியிருந்தவர் சுரேஷ்.

இவரின் விடுதலைச் செயற்பாடுகளை நன்கறிந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அவரின் விடுதலைப் பற்றை மதிக்கும் வகையில் 2004 ஆம் ஆண்டு வன்னிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

வன்னிக்குச் சென்ற சுரேஷ் அவர்களை வெளிநாட்டிலிருந்து வருவோரை வரவேற்கும் கிளிநொச்சியில் அமைந்த நந்தவனம் வரவவேற்றது. அவர் தங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகளையும் அவர்கள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து விசுமடு புளியடியில் அமைந்துள்ள அனைத்துலகத் தொடர்பகத்தில் பொறுப்பாளர் வீ.மணிவண்ணனுடன் (கஸ்ரோ) சந்திப்பும் விருந்தோம்பலும் நடைபெற்றன. கனடாவில் அமைப்பின் செயற்பாடுகள் குறித்து பல மணி நேர உரையாடல்கள் நடைபெற்றன.

சுரேஷ் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்காக 2004 ஆண்டு காலகட்டத்தில் உலகத் தரத்தில் மிக விலையுயர்ந்த கனோன் புகைப்படக் கருவியை (ஊயழெ ஊயஅநசய) வாங்கி வந்திருந்தார். தேசியத் தலைவருடனான சிறப்பு சந்திப்பும் மறுநாளே ஒழுங்கு செய்யப்பட்டது. தேசியத் தலைவர் அனைத்துலகத் தொடர்பகத்திற்கு வருகை தந்து சுரேஷ் சந்திக்கிறார். ஒரிரு மணி நேர உரையாடலும் விருந்தோம்பலும் தேசியத் தலைவரால் வழங்கப்பட்டது.

சந்திப்பின் முடிவில் தேசியத் தலைவருக்காக சுரேஷ் கமெரா எடுத்து வந்த விடயத்தைக் கஸ்ரோ அவர்கள் தேசியத் தலைவரிடம் குறிப்பிட்டார். தலைவரும் அக் கமெராவை எடுத்து வரும்படி கஸ்ரோவிடம் தெரிவித்துக்கொண்டு சந்திப்பை முடித்து கொட்டகையிலிருந்து தன்னுடைய இருப்பிடம் நோக்கிச் செல்வதற்கு கதைத்துக்கொண்டு வெளியேறினார். அப்போது போராளி ஒருவர் கமெராவை எடுத்து வருகிறார். வரும் வழியில் தேசிய தலைவரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவும் இம்பிரான் - பாண்டியன் படையணிக்குப் பொறுப்பாகவும் இருந்த ரட்ணம் மாஸ்டர் மற்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட போராளி ஒருவராலும் குறித்த கமெரா பாதுகாப்பு ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

பின்னர் அக்கமெரா சுரேசின் கைகளில் போராளியால் வழங்கப்பட்டது. குறித்த கமெராவை தலைவர் அவர்களிடம் கையளித்த சுரே‘, கமெராவின் சிறப்பு அம்சங்கள் குறித்து ஆர்வமாக சுரேசிம் தலைவர் கேட்கவே நின்றநிலையில் உரையாடல் மீண்டும் ஒரு மணி வரை தொடர்ந்தது. கமெராவோ மிகப் பெரியது, எடையும் கூடியது, லென்சுகளும் பிரமாண்டமானவை.

இயக்கத்திடமே அத்தரத்தில் கமெரா இல்லை என்பதை தேசியத் தலைவர் தன்னைச் சுற்றி நின்றவர்களிடம் குறிப்பிடுகின்றார். அதன் பிறகு அக்கமெராவை இயக்குவது குறித்த விளக்கமும் சுரேசால் செய்முறையில் செய்து காண்பிக்கப்பட்டது. தலைவரும் அதை ஆர்வமாகக் கேட்டறிந்தார். அதைத் தொடர்ந்து தேசியத் தலைவர் “என்னை எடுங்கள்” உங்கள் கமெராவின் தரத்தைப் பார்ப்போம் என்று கூறவே சுரேஷ் மிக உச்சாகத்துடன் தலைவரை மாமரத்தின் கீழ் நிறுத்தி படத்தினை எடுத்தார். ஒரு கிளிக் படபடபடபட என சந்தம் சுற்றியிருந்தவர்களை வியக்க வைத்தது. சுரேசும் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மிக நேர்த்தியாக படங்களை எடுத்தார். பின்னர் எடுத்த படங்களை தலைவரிடம் கமெரா திரையில் சுரே‘ காண்பிக்கிறார். படங்கள் மிகத்தெளிவாகவும் மிகத் துல்லியமாகவும் இருந்ததைப் பார்த்து தலைவரும் வியந்தார். வியந்தது மட்டுமல்லாமல் சுரேசையும் பாராட்டினார்.

தேசியத் தலைவரை சுரேஸ் எடுத்த படம் அன்றை ஆண்டே அனைத்துலகத் தொடர்பகத்தின் வெளியீட்டுப் பிரிவால் புலம் பெயர் நாடுகளில் வெளிவரும் தமிழ் தாய் நாட்காட்டியில் பிரசுரிக்கப்பட்டது மட்டும் அல்லாம் இன்று வரை அப்படம் வெளியீடுகளிலும் பிற தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தொடர்ந்து உரையாடிய தேசியத் தலைவர் அவர்கள் இக்கமெராவை நிசாமிடம் (அஞ்சுனா புகைப்படப் பிரிவுப் பொறுப்பாளர்) கொடுக்கும் படி கஸ்ரோவிடம் கூறி சிறிது நேரத்தின் பின் அங்கிருந்து வெளியேறினார். பின்னர் வெளிநாட்டிலிருந்து செல்வோர் தேசியத் தலைவருடனான சந்திப்பில் புகைப்படம் எடுக்கும் டிஜிட்டல் மயமான புதிய கலாச்சாரமும் அவ்விடத்திலேயே ஆரம்பமாகியது.





தங்கியிருந்த ஒவ்வொருநாளும் தமிழீழ கட்டுமானங்களை பார்வையிட போராளிகளால் அழைத்துச் செல்லப்பட்டார் சுரேஷ். அவர் அங்கிருந்த நாட்களில் தமிழர் தாயகத்தின் இயற்கை அழகுகள், மக்கள், வாழ்வியல், புலிகளின் கட்டுமானங்களை புகைப்படங்கள் எடுத்து ஆவணப்படுத்தினார்.
தாயகத்திலிருந்து திரும்புப் போது தனது சொந்த தேவைக்காக எடுத்து வந்த அதே மாதிரியான மற்றொரு கமெராவையும் கஸ்ரோ அவர்களிடம் கொடுத்துவிட்டு வந்தார். அக்கமெரா வெளிநாடுகளிலிருந்து சென்ற தழிழர் ஒருங்கிணைப்புக்குச் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள், தேசியத் தலைவருடனும், கஸ்ரோ அவர்களுடன் புகைப்படங்கள் எடுப்பதற்கு நிலவன் என்ற போராளியால் இறுதி வரை பயன்படுத்தப்பட்டது சுட்டிக்காட்டத்தக்கது. கனடா திரும்பியதும் தாயக நோக்கிய வேலைத் திட்டங்களை இறுதி வரை முன்னெடுத்தார். 2004 ஆம் ஆண்டு டொரோண்டோவில் பிரமாண்டமாக ஞரநநள ீயசம முன்றலில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வை முற்றுமுழுதாக ஒழுங்கமைத்தவரும் சுரேஷ் அவர்களே.

தாயகத்தில் எடுத்த புகைப்படங்களை சுரேன் என்ற இணையத்தில் மக்கள், வாழ்வியல், செஞ்சோலை, அறிவுச்சோலை, நவம் அறிவுக்கூடம், மயூரி இல்லம், முதியோர் இல்லங்கள், பராமரிப்பு இல்லங்கள் போன்ற பொதுவெளியில் பார்வையிடக்கூடிய படங்களை தரவேற்றம் செய்திருந்தார். தமிழீழ கனவை சுமந்து பணியாற்றிய தேசப்பற்றாளனான சுரேஷ் அவர்களின் இழப்பு என்பது பேரிழப்பாகும். அவர் ஆற்றிய விடுதலைப் பணிக்கு தலை வணங்கி வீர வணக்கம் செலுத்துவோம்.

*நன்றி: களத்தில் இணையத்தளம்*


பல்கலாச்சார ஊடகங்களுக்கு நிதி வழங்க வேண்டுமென NDP கட்சி வலியுறுத்துகிறது.

இதுவரை காலமும் அரசாங்கம் பல்கலாச்சார ஊடகங்களுக்கு நிதியுதவி வழங்கவில்லை. அவற்றுக்கு நிதியுதவி செய்வதன் மூலம்> அவையும் அம்மொழி மக்களுக்கான செய்திகளையும் தகவல்களையும் எடுத்துச் செல்ல முடியும். இவ்வுதவித் தொகை வழங்கப்படும் வரை NDP கட்சியும் அதன் உறுப்பினர்களும் தொடர்ந்து அதற்காக போராடும்.



Andrea Horwath
Leader, Ontario NDP

Ontario NDP NPD de l'Ontario

# சாதனை படைக்கும ஜஸ்டின் என்னும் திருமகன்... சேவையின் பெருமகன்... பார் போற்றும் பெரியோன்...

- மனோ சீவரெத்தினம்



ஓட்டாவாவை தலைநகரமாக கொண்ட கனடா 96,76,139 ச.கி மீற்றராகும். பிரதான மதமாக கிறிஸ்தவம் மிளிர்கிறது. ஆங்கிலம், பிரெஞ்சு மெ-ாழிகளை தன்னகத்தே கொண்டு திகழும் கனடா தன் நாட்டுக்கு புகலிடம் தேடிவரும் ஏனைய நாட்டு பீரஜைகளை மொழி, மதம், இனம் பாராது அரவனைத்துக் கொள்ளும் பண்பு இந்நாட்டின் பண்பு என்று குடியேறிகளின் அன்புக்குரியதாகவுள்ளது.

இந்நாட்டில் தெரிவாகிய 23வது பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ருடோ அவர் 23.12.1971 ல் பிறந்தவராவர், மிக இளவயதில் பிரதம மந்திரியாகியவராக இவர் மிளிர்கிறர். இவரின் தந்தையும் கனடா நாட்டின் பிரதமராக இருந்தவர். பீய்றே ட்ருடோ (Pierre) என்பதும் குறிப்பிடத்தக்கது. இளவயது பிரதமர் ஜஸ்டின் அவர்களின் வழிகாட்டலிலேயே கனடா இன்று நடைபோடுகிறது.

வேற்று நாட்டு குடியேறிகளின் அபார நம்பிக்கையும், அன்புமே கடந்த கனேடிய தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி பெற்ற ஆசனங்களை விட 16 ஆசனங்களை கூடுதலாக பெற்று 157 தொகுதிகளைப் பெற்ற லீபரல் கட்சி ஜஸ்டின் அவர்களை பிரதமராக ஏற்று மிகமிக நல்லபடியான ஆட்சியை நடாத்திக் கொண்டிருக்கின்றது.

தமிழகத்தின் மக்கள் தொகையில் அரைவாசிப் பேர்களையே கொண்டிருக்கும் கனடா பரப்பளவில் ரஸ்யாவுக்கு அடுத்தபடியாக உலகின் மிகப் பெரிய நாடாகத் திகழ்கிறது. ஆகவே இந்நிலையை மாற்றியமைக்க வந்தேறு குடிகளை வரவேற்று நாட்டை நிரப்பும் கைங்காரியத்தை கனடா அரசு மேற்கொள்கிறது. அரசு திட்டமிட்டபடி பத்துலட்சம் பேருக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்க முடியுமா? என்பதற்கான திட்டம் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. கனடாவில் கூடிவரும் மக்களின் தேவைகளை சீர் செய்ய பணியாட்களும் கூடுதலாக தேவைப்படுகிறது. அதை நிை-றவு செ்வதற்காகவும். ஈடுகட்டுவதற்காகவும் வெளி நாட்டினரை கனடா வரவேற்கின்றது என்று சொல்கின்றார். கனடாவைச் சேர்ந்த குடி-வரவு வல்லுநுர் நேரு குணரெத்தினம்.

2021 ஆண்டிற்குள் பத்துலட்சம் மக்களை குடியேற்ற முடியுமா? என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. ஏனனில் மேற்படி அறிக்கையை வைத்த இன்றைய பிரதமர் ஜஸ்டினின் லீபரல் கட்சி சிறுபான்மை அரசா-கும். எனவே எதிர்கட்சியின் ஆதரவின்றி இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ள அதேவேளை இத்திட்டத்துக்கு எதிர்க்கட்சியான கன்சவேர்டிக் கட்சி ஆதரவு வழங்கி வருகிறது.

2015ல் அவர்களே கொண்டு வந்த இப்பாரிய திட்டத்துக்கு அவர்கள் வழி மொழிபவர்களாகவே இருக்கிறார்கள். இதே வேளை புகலிடம் தேடி வருபவர்களுக்கு எதிரான கருத:துக் கொண்டிருந்த பீப்பில்ஸ் பார்ட்டி ஒப் கனடா கட்சியின் தலைவர் மாக்சிம் கூட கடந்த தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. இதிலிருந்து குடியேற்ற வாசிகளின் ஒற்றுமையும், வாக்காளர்களிடையே நிலவும் ஒற்றுமையும் புரிந்து கொள்ளக் கூடிய-தாக இருக்கிறது. இது ஜஸ்டின் அவர்களுக்கு கிடைத்த இன்னுமொரு வெற்றியாகும். இதே வேளை கனடா அரசு அந்நாட்டிலுள்ள மாகாணங்கள் பிரதேசங்களுட்ன கூடி ஒரு ஒப்பந்தத்தை கொண்டு வந்துள்ளது. மில்லியன் டொலர் மதிப்பான திட்டத்தில் அத்தியாவசிய தெரிலாளர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 1500 டொலராக இருக்க வேண்டுமென ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜுன் மாதம் முதல் நடைமுறைக்கு வரும். இது அத்தியாவசிய தொழிலாளர்களின் அண்மைப் பெற ஜஸ்டின் அவர்களுக்கு கிடைக்கும் மற்றுமொரு வெற்றியாகும் மேலும்.

கனடாவில் தாக்குதல் பாணி துப்பாக்கிகள் தடை செய்யப்படுவதாகவும் இது உடனடியாக நடை முறைக்கு வரும் என்றும் அறிவித்துள்ளார். இதுவும் சகல கனடா மக்களிடம் இவரின் சேவைக்கு முத்தாரம் வைப்பது போல் அமைந்துள்ளது மேலும்.

தேர்தல் நேரத்தில் ஜஸ்டின் ட்ருடோ அவர்களின் தலை-லமையிலான லிபரல் கட்சி ஒரு வாக்குறுதியை அவித்திருந்தது. அதாவது கனடா நாட்டின் குடியுரிமையை பெறுவதற்கு விண்ணப்பம் செய்யும் போது அதற்க்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை நீக்குவதாக கூறியிருந்தது. அது விரைவில் நடை முறைக்கு வரும் தருணத்தில் புகல-ிடக் கோரிக்கையாளர்களின் முக்கியத்துவத்தை பறைசாற்றும் மற்றொரு விடயமாக உருவெடுக்க அதுவும் ஜஸ்டின் அவர்களின் சேவைக்கு மற்றுமொரு மைல் கல்லாகும். மேலும்.

உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் கொவ-ிட்-19 வைரஸ் தாக்கத்தின் கொரோளாக் கோரப் பிடியில் பாரிய இழப்புகளை சந்தித்து இக் கட்டுரை எழுதும்போது 5562 பேர் வரை மடித்துள்ளார்கள். அதே வேளை 36895 பேர் குணமடைந்துள்ளனர். இம்மக்களிடையே அன்பொழுக்கம், சமரிசமாகவும், சமத்துவமாகவும் பழகியதின் நிமித்தம் பிர-தமர் ஜஸ்டின் அவர்களின் மனைவி சோபிகி க்றேகோய்றே (ளுழிாைஉ புசநபழசைந) அவர்களும் இத்தொற்றுக்கு ஆளாகியிரந்த போதும் பிரதமர் ஜஸ்டின் நாட்டு மக்களின் சேவைக்காக அல்லும் பகலும் பாடுபட்டதால் குணமடைந்தோர் அதிகரித்தனர். அதில் இவர் மனைவியும் அடங்கும்.

இவ்வாறு இளம் பிரதமர் ஜஸ்டின் அவர்களின் சேவை கனடா நாட்டு மக்களுக்கும், குடியேற்றவாசிகளுக்கும் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதமாகும். தற்சமயம் உலகமே புகழும் கனடா நாட்டு உன்னதத் தலைவன் ஜஸ்டின் என்பதற்கு மறுபேச்சுக்கு இடமேயில்லை.



# SUPPORT FOR YOU, YOUR FAMILY AND YOUR BUSINESS.

## FINANCIAL ASSISTANCE IS AVAILABLE

Canada Emergency Response Benefit
Canada Emergency Wage Subsidy
Canada Emergency Business Account

**VISIT CANADA.CA/CORONAVIRUS TO LEARN MORE**





Government of Canada Gouvernement du Canada

Canada

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

**Ontario**

# அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியேன்! உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்குவேன்! கோட்டபாய சூளுரை!

நக்கீரன்- கனடா

சிறிசேனா - இரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கும் சனாதிபதி கோட்டபாய இராசபக்ச ஆட்சிக்கும்இடையே வேற்றுமை இல்லை இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என தமிழர்களில் ஒரு பிரிவினர் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருக்கிறார்கள். இவர்கள் வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் இடையில் உள்ள வேற்றுமை தெரியாதவர்கள். இரண்டும் நிறத்தில் வெண்மையாக இருப்பதால் இரண்டும் ஒன்று என நினைப்பவர்கள்.

சிறிசேனா - இரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கும் சனாதிபதி கோட்டபாய இராசபக்ச ஆட்சிக்கும் இடையில் அடிப்படையில் ஒரு வேற்றுமை இருக்கிறது. நல்லாட்சி அரசில் ஒப்பீட்டளவில் சனநாயகத்துக்கான இடைவெளி இருந்தது. அது இப்போது மறுபடியும் சுருங்கி வருகிறது. Won't hesitate to withdraw Sri Lanka from bodies which target ... ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் சனநாயகத்தைப் பலப்படுத்தவும் இனங்களுக்கு இடையே நல்லெண்ணத்தைக் கட்டி எழுப்பவும் பல முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1) தமிழ்மக்கள் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை எந்நக் கெடுபிடியும் இல்லாம் அனுட்டிக்கும் உரிமை வழங்கப்பட்டது. இராணுவமோ காவல்துறையோ அந்த வழிபாட்டுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தவில்லை. போரில் இறந்தவர்களை நினைவு கூரல் ஒரு சனநாயக நாட்டில் மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமை.
2) இராசபக்ச அரசு இராணவத்துக்கு வழங்கியிருந்த பொலீஸ் அதிகாரம் விலக்கப்பட்டது. இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டது.
3) மே 18 யை முப்படைகளின் வெற்றிவிழாவாகக் கொண்டாடி வந்த வழக்கம் நிறுத்தப்பட்டது.
4) தமிழில் தேசியப் பண் பாட விதித்திருந்த தடை நீக்கப்பட்டு தமிழிலும் அது பாடப்பட்டது.
5) வெள்ளைவான் கலாசாரம் ஒழிக்கப்பட்டது.
6) ஊடகவியலாளர்கள் யாருமே கைது செய்யப்படவில்லை. கைது செய்தபின் காணாமல் போகவில்லை.
7) நிர்வாக இயந்திரத்தில் இராணுவத்தினர் பதவியில் அமர்த்தப்படவில்லை.
8) இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 30-1 க்கு சிறிலங்கா அரசு இணை அனுசரணை வழங்கியது.

ஆனால் இன்றைய சனாதிபதி கோட்டாபய இராசபச்ச ஆட்சியில் இவை எல்லாம் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளன. மாற்றப்பட்டு வருகின்றன.

கடந்த மே 28 இல் நினைவு கூரப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் இராணுவம் திட்டமிட்டு பல இடைஞ்சல்களை மேற்கொண்டுள்ளது. கொ-ரோனா தொற்று நோயை சாட்டாக வைத்து மக்கள் முள்ளிவாய்க்காலில் கூடுவதைத் தடை செய்தது. முள்ளிவாய்க்காலுக்கு வெளியில் நினைவேந்தல் நாள் அனுட்டிக்கப்படுவதற்கும் இராணுவம் தடை விதித்தது. நீதிமன்றங்களை நாடி - கொரோ-னாவைக் காரணம் காட்டி - தடையுத்தரவு வாங்கப்பட்டது. முள்ளிவாய்க்காலுக்குப் பயணம் செய்தவர்கள் வழி மறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்கள்.




PREMIER DIAGNOSTIC NETWORK
PDXN
Tel: 888-988-7396 | www.pdxn.ca
RADIOLOGY AND CARDIOLOGY SERVICES
• X-Ray
• Ultrasound
• Bone Density
• Echocardiogram
• Holter Monitor
• Stress ECG
• ABPM (24h Blood Pressure Monitoring)
LOCATIONS
Marksteeles Medical Imaging
(South of Markham & Steeles - Blue Bldg.)
3341 Markham Road, Unit B124
Scarborough, ON M1X 0V5
Tel: 647-341-0183 Fax: 647-341-0184
Bellsmere Medical Diagnostic Centre
(North of Ellesmere & Bellamy)
1920 Ellesmere Road, Suite 311
Scarborough, ON M1H 2V6
Tel: 416-289-2280 Fax: 416-289-7321
Brimley Medical Diagnostic Centre
(South of Brimley & Sheppard)
2020 Brimley Road
Scarborough, ON M1S 4R7
Tel: 416-299-7677 Fax: 416-299-7948
ACCREDITATIONS
Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario
Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario
Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN
Accredited Ultrasound Training Program : Accreditation Canada
Infection Control and Cleaning Process by : Public Health Ontario
Funded by
Ontario Ministry of Health & Long Term Care


கடந்த ஆண்டு (2019) நொவெம்பர் மாதம் 27 இல் மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டி வெளி மற்றும் பண்டிவிருச்சான் ஆகிய இரு மாவீரர் துயிலும் இல்லத்திலும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அது தொடர்பாக அதனை ஏற்பாடு செய்த இரண்டு செயற்பாட்டாளர்கள் கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவி-னரால் கடந்த புதன்கிழமை (மே 20) மன்னாரில் தனித்தனியாக இரண்டு மணி நேரம் விசாரணைகக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்ீழளவ-றுயச ளுசை டுயமெய: குசயஉ-வரசநன யனெ ருதெரளவ கழச வுயஅடைள □ வூாந னுிடழஅயவ

மேலே கூறியது போல முன்னைய இராபக்ச ஆட்சியில் இராணுவத்துக்கு வழங்கப்பட்ட பொலீஸ் அதிகாரம் பிடுங்கப்பட்டதால் இராணுவம் அழையா விருந்தாளிகளாக கே-ாயில் திருவிழாக்களில் விளையாட்டுப் போட்டிகளில் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மாலை மரியாதையைப் பெற முடியவில்லை. ஒரு நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு சனநாயக நாடுகளில் பொலீசுக்கே வழங்கப்படும். காரணம் அதுவொரு சிவில் அமைப்பு. மிக அருமையாகவே - வெள்ளம், புயல் போன்ற பேரிடர்களின் போதே - இராணுவம் அழைக்கப்பட்டு நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்படும். கொரோனாவைக் கட்டுப்படுத்த இலங்கை நீங்கலாக வேறு எந்த நாடும் முப்படைகளைப் பயன்படுத்தவில்லை.

ஐந்து ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் வெற்றிவிழா கொழும்பில் கொண்டாடப்பட்டுள்ளது. போர் வெற்றிவிழாக் கொண்டாட்டத்துக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

ஒரு நாட்டின் சுதநதிரத்தை எல்லா மக்களும் அனுபவிக்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் நாடு தன்னுடையது, அதன் கொடி தன்னுடையது என்ற நினைக்க வேண்டும். அதற்குப் பெயர்தான் சனநாயகம். ஆனால் கோட்டாபய இராசபக்ச ஆட்சியில் மீண்டும் தமிழில் தேசியப் பண் பாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் நாட்டின் குடிமக்கள் அல்லர் என்பதே இதன் பொருள் ஆகும்.

வெள்ளைவான் கலாசாரம் மீண்டும் தலை தூக்காவிட்டாலும் தமிழ்மக்கள் இராணுவம், பொலீஸ் தாக்குதலுக்கு அவ்வப்போது ஆளாகிவருகிறார்கள். தாக்குதலை அடுத்துச் சிலர் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது சரியே. ஆனால் அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு உரிய விசாரணையின் பின்னரே தண்டிக்கப்பட வேண்டும். சட்டத்தை கையில் எடுக்க யாருக்கும் உரிமை கிடையாது.

ஒரு நாட்டில் சர்வாதிகர ஆட்சி நடைபெறுகிறதா? மக்கள் ஆட்சி நடைபெறுகிறதா? என்பதற்கு சாட்சியாக இருப்பது ஊடக சுதந்திரம். அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் ஊடகங்கள் ஆட்சியாளரை விமர்ச்சிக்கின்றன. சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் போன்றோரை நார்போல கிழி கிழி என்று கிழிக்கின்றன. ஆனால் யாருமே கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுவதில்லை. ஆக மீறினால் ஊடகங்கள் மீது மான இழப்பு வழக்குத்தான் தொடர முடியும்.

சிறிலங்காவில் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிரிகள் போல் இராணுவம் காவல்துறை இரண்டாலும் பார்க்கப்படுகிறார்கள். ஊடகவியலாளர்கள் ஆங்காங்கே தாக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. (https://thediplomat.com/…/post-war-sri-lanka-fractured-and…/)

கோட்டாபய இராசபக்ச ஆட்சியில் நாட்டின் நிருவாக இயந்திரம் படிப்படியாக இராணுவமயப்படுத்தப்பட்டு வருகிறது. நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் நாட்டின் உயர் பதவிகள் இராணுவ அதிகாரிகளால் நிரப்பப்பட்டு வருகின்றன.

இரண்டு நாள்களுக்கு முன்னர் நல்வாழ்வு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் சுங்கத் திணைக்கள இயக்குநராக மேஜர் ஜெனரல் விஜிதா இரவிப்பிரியா நியமிக்கப்பட்டார். கோட்டாபய இராசபக்ச சனாதிபதியானதன் பின்னர் சிவில் நிர்வாகத்தில் இராணுவ அதிகாரிகளின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்ற எதிர்பாப்பு மெய்ப்பிக்கப் பட்டுவருகிறது.

தெற்காசியாவில் அதிக இராணுவ மயப்படுத்தப்பட்ட நாடாக இலங்கை இருப்பதாக நியூசிலாந்து ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இலங்கையில் போர் 11 ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் மூன்று இலட்சம் படைத்தரப்பினரைக் கொண்டுள்ள சிறிலங்கா அரசாங்கம் நாட்டின் குடியியல் நடவடிக்கைகளில் படைத்தரப்பினரை ஈடுபடுத்தி வருவது குடியியல் சமூகத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் இவ்வூடகம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடந்த போர் வெற்றி விழாவில் பேசிய சனாதிபதி கோட்டபாய அனைத்துலக அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியேன்! உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்குவேன்! எனச் சூளுரைத்துள்ளார். "நாட்டுக்காகப் பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்த படையினர் தேவையற்ற அழுத்தத்துக்கு உள்ளாக நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. அதே வேளை, எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு பன்னாட்டு நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை" எனச் சூளுரை எடுத்துள்ளார். இதில் வியப்பில்லை.

சனாதிபதி கோட்டபாய இராசபக்ச அவர்களின் சூளுரையை அமெரிக்கா கண்டித்துள்ளது. மா புளித்தால் அப்பத்துக்கு நல்லது என்று நினைக்கிறேன்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 897



கிரான்குளம், குருக்கள்மடம், செட்டிபாளையம், மாற்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை ஆகிய கிராமமக்களின் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட்டுவரும் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவில் பழமையும் பெருமையும் மிக்கதாக விளங்குகின்றது. இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரப் பகுப்பினுள் அடங்காது தனித்திருப்பது, உரைபெறு கட்டுரை என்னும் பகுதியாகும். கோவலன் கொலைக்குப் பின்னர், பத்தினித் தெய்வமாகக் கண்ணகி உயர் நிலை பெற்றதையும், மன்னர்கள் கண்ணகிக்குக் கோவில் அமைத்து வழிபட்ட வரலாற்றையும் உரைபெறு கட்டுரை விளக்குகின்றது. அத்தோடு, கண்ணகி அருளால் இம்மன்னர்கள் ஆண்ட நாடுகளும் வளமை பெற்றன என்பதையும் உரைபெறு கட்டுரை விளக்குகின்றது. இவ்வாறாக கண்ணகித் தெய்வத்தின் உயர்வால் ஈர்க்கப்பட்ட மன்னர்களுள் ஒருவனாக, இலங்கையைச் சேர்ந்த கயவாகு மன்னனும் விளங்கியுள்ளான். இம்மன்னன் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலே இலங்கையை ஆட்சி செய்துள்ளான். இம்மன்னனாலேயே கண்ணகி வழிபாடு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்செய்திகளை ஈழத்து வரலாற்று நூல்களாகக் கருதப்படும் இராஜலியும், இராஜரத்னாகரவும், கஜபாகத்தாவ என்னும் பத்தினிவரலாறு கூறும் சிங்கள நூலும் குறிப்பிட்டுள்ளன.

சேரன் செங்குட்டுவன் வஞ்சியிலே கண்ணகிக்குக் கோயில் அமைத்து விழாவெடுத்தபோது, அவ்விழாவிலே இலங்கைக் கஜவாகு மன்னனும் பங்குபெற அழைக்கப்பட்டுள்ளான். இதன்பின்னர் கண்ணகித் தெய்வத்தின் அற்புதங்களைக் கேள்விப்பட்டு, இலங்கை திரும்பியவுடன் இலங்கையிலும் கண்ணகி வழிபாட்டை உண்டாக்கிப் பெருவிழாச் செய்துள்ளான். அங்கணாக்கடவையிலும், வேறு-பல இடங்களிலும் கண்ணகிக்குக் கோவில் அமைத்துள்ளான். இவ்வாறாக தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடாகவும், சிங்கள மக்களிடையே பத்தினிதெய்யோ வழிபாடாகவும் ஈழத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புப்பெற வழிசெய்தவன் இலங்கைக் கஜவாகு மன்னன் ஆவான்.

ஈழத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புப்பெற வழி செய்தவன் இலங்கைக் கஜவாகு மன்னன் என கண்ணகி வழிபாட்டின் ஆரம்பம் கூறப்பட்டபோதிலும், மட்டக்களப்பிலுள்ள செட்டிபாளையத்திலே கண்ணகி கோயில் உருவான வரலாறு ஒரு கர்ணபரம்பரைக்கதையாக வழக்கிலிருந்து வருகின்றது. கண்ணகி மதுரையை எரித்த பின்னர் கடல்கடந்து இலங்கைக்கு வந்து, பல இடங்களிலும் தங்கி இறுதியில் செட்டிபாளையத்திற்கு வந்து கிளைபரப்பி நின்ற வம்மி மரத்தடியில், வன்னிச்சியார் என்ற பெயருடன் வசித்ததாகவும், இவருடன் செட்டிபாளையத்திலே வாழ்ந்த செட்டிச்சியார் என்ற வணிகர்குலப்பெண் நட்புக்கொண்டு, உச்சிப்பொழுதிலே உணவு முதலியவற்றை இவருக்கு அளித்து வந்துள்ளார். ஒரு வைகாசித் திங்களில் மாலைநேரம் வன்னிச்சியார் தலைமுடியை அவிழ்து உலரவைத்துக்கொண்டிருந்தபோது செட்டிச்சியார் அங்கு சென்றுள்ளார். அவிழ்ந்து கிடந்த தலையிலே பேன் பார்க்கும்படி வன்னிச்சியார் செட்டிச்சியாரைக் கேட்டதாகவும், அவ்வாறே செய்ய, வன்னிச்சியார் தலையிலே ஆயிரங்கண்கள் இருப்பதைக் கண்டு செட்டிச்சியார் அதிசயப்பட, "வைகாசித் திங்களில் வருவேன்" எனக் கூறி, வன்னிச்சியார் மறைந்ததாகவும் கர்ணபரம்பரையான கதை வழக்கிலுள்ளது. ஆலயம் அமைப்பதற்கு கண்ணகி அம்மனே நிலையம் எடுத்து வேப்பிலைகளினால் அடையாளப்படுத்தியதாகவும் வாய்மொழியான கதை நிலவுகின்றது.

*வளரும்...*

## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்

### - மட்டக்களப்பு -

"பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப்பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவர்க்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான் மறவாமல் நின்று ஏத்துவனே."

**உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரானா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:**

1. சமூக இடைவெளி
2. கைகளை அடிக்கடி கழுவுதல்
3. தேவையற்று வெளியே செல்லுதல்
4. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருப்பது

**இந்த நான்கு நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த நான்கு நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.**

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

**ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸு கந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்'
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.**



# அன்பின் தொனி - 561

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக**

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர். பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். நீர் மனு'ரை நீர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர். உமது பார்வைக்கு ஆயிரம் வரு'ம் நேற்றுக்கழிந்த நாள் போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது. அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர், நித்திரைக்கு ஒத்திருக்கிறார் கள், காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப் புண்டு உலர்ந்துபோம். நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம். எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும், எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர். எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது, ஒரு கதையைப்போல் எங்கள் வரு'ங்களைக் கழித்துப்போட் டோம். எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வரு'ம், பெலத்தின் மிகுதியால் எண்பது வரு'மாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே, அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம். உமது கோபத் தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்து கொள்ளுகிறவன் யார்? நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். கர்த் தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்? உமது அடியாருக்காகப் பரிதபியும். நாங்கள் எங்கள் வாழ் நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும். தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வரு'ங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும். உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக. எங்கள் தேவ னாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக, எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும், ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.
**- சங்கீதம் 90: 1-17**

**திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாதேயும்**

கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும், என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக. என் ஆபத்துநாளிலே உமது முகத்தை எனக்கு மறையாதேயும், உமது செவியை என்னிடத்தில் சாயும், நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச்செய்யும். என் நாட்கள் புகையைப்போல் ஒழிந்து, என் எலும்புகள் ஒரு கொள்ளியைப்போல் எாியுண் டது. என் இருதயம் புல்லைப்போல் வெட்டுண்டு உலர்ந்தது, என் போஜனத்தைப் புசிக்க மறந்தேன். என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறது. வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்ளு பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப்போலானேன். நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப்போல் இருக்கிறேன். நாடோறும் என் சத்துருக்கள் என்னை நிந்திக்கிறார்கள், என்மேல் மூர்க்கவெறிகொண்டவர்கள் எனக்கு விரோதமாய்ச் சாபம் இடுகிறார்கள். நீர் என்னை உயரத் தூக்கி, தாழத்தள்ளினீர், உமது சினத்திற்கும் கடுங்கோபத் திற்கும் உள்ளானேன். ஆதலால் நான் சாம்பலை அப்பமாகப் புசித்து, என் பானங்களைக் கண்ணீரோடே கலக்கிறேன். என் நாட்கள் சாய்ந்துபோகிற நிழலைப்போலிருக்கிறது, புல்லைப்போல் உலர்ந்துபோகிறேன். கர்த்தராகிய நீரோ என்றென் றைக்கும் இருக்கிறீர், உம்முடைய பேர்பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும். தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர், அதற்குத் தயைசெய்யுங்காலமும், அதற்காகக் குறித்தநேரமும் வந்தது. உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள்மேல் வாஞ்சைவைத்து, அதின் மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள். கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார். திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார். அப்பொழுது ஜாதிகள் கர்த்தருடைய நாமத்துக்கும், பூமியிலுள்ள ராஜாக்களெல்லாரும் உம்முடைய மகிமைக்கும் பயப்படுவார்கள். பின்சந்ததிக்காக இது எழுதப்படும், சிரு'டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும். கர்த்தர் கட்டுண்டவர் களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும், தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்துபார்த்து, வானங்களிலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமானார். கர்த்தருக்கு ஆராதனைசெய்ய, ஜனங் களும் ராஜ்யங்களும் ஏகமாய்க் கூடிக்கொள்ளுகையில், சீயோனில் கர்த்தருடைய நாமத்தையும், எருசலேமில் அவருடைய துதியையும் பிரஸ்தாபப்படுத்துவார்கள். வழியிலே என் பெலனை அவர் ஒடுக்கி, என் நாட்களைக் குறுகப்பண்ணினார். அப்பொழுது நான்: என் தேவனே, பாதி வயதில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும், உம்முடைய வரு'ங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும். நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையா யிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர், அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம், அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர், உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. உமது அடியாரின் பிள்ளைகள் தாபரித்திருப்பார்கள், அவர்கள் சந்ததி உமக்கு முன்பாக நிலை பெற்றிருக்கும் என்று சொன்னேன்.
**- சங்கீதம் 102: 1-28**

**அன்பான சகோதர, சகோதரிகளே!**
**ஜெபம்:**

இன்றய நாளிலும் கொறோனா வைறஸ் (ஊழசழயெ ஏசைரள) நோயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்காகவும், அவர்களைப் பாதுகாக்கவும், வைத்திய உதவி செய்வதற்காகவும் தம்மை அர்ப்பணித்து முன்னிலையில் நின்று சேவை செய்யும் வைத்தியர்கள், தாதிமார்கள், உடன் உதவியாளர்கள் மற்றும் வைத்திய சாலையில் வேலை செய்யும் ஊழியர் யாவருக்காகவும் அவர்கள் பாதுகாப்புக்காகவும் ஜெபிப்போம்.

**மேலதிக ஜெப தேவைகளுக்கு தொடர்பு: (647) 271-7645**
**தொடரும்...**

---

பயணத் தொடர் - பகுதி-2

# பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்

**(முனைவர் வே, சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு)**




அக்டோபர் 7ம் தேதி மாலையில் என்னை ஆச்சரியப்படுத்திய ஒரு அரசியல் பரப்புரை. மிக வித்தியாசமானது. லிபரல் கட்சியின் வேட்பாளர்கள் கலந்து கொண்ட ஒரு சந்திப்பு நிகழ்ச்சி. வேட்பாளர்கள் திருவாளர்கள் கெரி ஆனந்தசங்கரி, சவான் சான், ஜோன் மெக்கே, ஜின் யிப் உட்பட பலரைச் சந்திக்கும் ஒரு வாய்ப்பு. விரைவில் நிகழவிருந்த கனடா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒரே கூட்ட அரங்கில் கனடா வாழ் தமிழ் சமூகப் பிரதிநிதிகள், தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்த பரப்புரை நிகழ்த்தும் ஒரு நிகழ்ச்சி அது. மிக எளிமையாக நடைபெற்றது

திருவள்ளுவர் ஒரு ஆட்சியாளரின் அடிப்படைத் தகுதி என்ன வென்று கூற வரும் பொழுது, "காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்" என்கிறார். காண வரும் பலருக்கும் எளிதில் காட்சி தந்து, கடுமையாகப் பேசாதவனாகவும் இருக்கும் ஆட்சித்தலைவனை அந்நாடு மிக உயர்த்திச் சொல்லும். குடிமக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் நாடாள்வோன் அக்கறை செலுத்த வேண்டும். நாட்டுத் தலைவன் என்ற எண்ணத்தால் செருக்குற்று குடிகளிடமிருந்து விலகி இருக்கும் தலைவனிடம் அவர்கள் குறைகளைக் கூறமுடியாத நிலை இருந்தால் அவனால் நாட்டின் உண்மையான நிலையை அறிய முடியாமல் போய் விடும். சிடுசிடுக்கும் குணம் கொண்டவர்களிடம் தன் மனதிலுள்ளதை வெளிப்படுத்துவதில் எவருக்கும் பயம் ஏற்படும். அந்த அச்சத்தால் சொல்ல வந்த கருத்தையும் சொல்லாமலே விரைந்து வெளியேறி விடுவார்கள். அதனால் தலைவனுக்கும் நாட்டுக்குமேகூட நெருக்கடி ஏற்படலாம்.

இராமாயணத்தில் ஒரு காட்சி. ராமன் வீதி உலா வருகிறான். அவ்வப்போது தேரிலிருந்து இறங்கி எதிர்ப்படும் மக்களிடம் நலம் விசாரிக்கிறான். "நீங்கள் நலமா? குழந்தைகள் நலமா? துன்பத் தொடக்கின்றி மகிழ்ச்சியாக வாழுகிறீர்களா?" என்றெல்லாம் விசாரிக்கிறான். அரசனான பிறகு அல்ல. இளவரசனாக இருக்கும் போதே இப்படி விசாரிக்கிறான். "எதிர் வரும் அவர்களை எமையுடை இறைவன் முதிர் தரு கருணையின் முகமலர் ஒளிரா எது வினை? இடர் இலை? இனிது நும் மனையும்? மதி தரு குமரரும் வலியர்கொல்? எனவே." என்பது அந்தப் பாடல்.

அந்தப் பாரம்பரியமான அரசியல் இந்தியாவிலும் ஒரு காலத்தில் இருந்தது. கலவரப் பகுதிகளில் கூட காந்தியும், நேருவும், காமராஜரும், எந்தப் பாதுகாப்பு வளையங்களும் இன்றித்தான் மக்களைச் சந்திக்கச் சென்றார்கள். மக்களை அவர்கள் நம்பினார்கள். மக்களும் அவர்களை நம்பினார்கள். ஆனால் இந்தியாவில் இன்றைக்கு அந்த நிலை இல்லை. இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஆட்சியாளர்கள் யாரும் பாதுகாப்பு வாகனங்களின்றி வெளியே வருவதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களே தங்கள் பாதுகாப்பு கவசங்கள் என்று நினைத்தால் நூற்றுக்கணக்கான வாகனங்களின் அணிவகுப்பும் "இசட்" ரக பாதுகாப்பும் ஏன்? ஆரோக்கியமான அரசியல் சூழல் இப்போது இந்தியாவில் இல்லை என்பது வருத்தத்தை தருகிறது.

ஆனால் கனடாவில் ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலையைப் பார்த்தேன். வெற்று உரைகள் இல்லை.. வீண் கோஷங்கள் இல்லை. ஆர்ப்பாட்டங்கள் இல்லை. அணிவகுப்புக்கள் இல்லை. கனடாவில் மட்டுமல்ல. நான் பயணப்பட்ட பல நாடுகளில் இப்படித்தான் தேர்தலும், பரப்புரைகளும் நடை பெறுகின்றன.

காட்சிக்கு எளியராய், கடும் சொல் அற்றவராய் காட்சி தரும் அன்பு நண்பர் திரு. கேரி அனந்த சங்கரியை நான் அங்கு சந்தித்தேன். பரபரப்பான தேர்தல் பரப்புரையின் இடையிலும் என்னோடு உரையாடி மகிழ்ந்தார். தேர்தலில் அவர் வெற்றிக்காக அட்வான்ஸ் வாழ்த்துக்களை அப்போதே தெரிவித்தேன். அடுத்த வாரத்திலேயே அந்த அன்புத் தமிழரின் வெற்றிச் செய்தி எட்டுத் திக்கிலும் எட்டியது.

கனடா நாடாளுமன்ற தேர்தலில் நண்பர் கெரி ஆனந்தசங்கரி 21,241 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றுள்ளார். கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் ஸ்காபரோ ஷரூஜ்பார்க் தொகுதியில் பெரும்பான்மை வாக்கு வித்தியாசத்தில் இரண்டாவது முறையாக அந்நாட்டு எம்பியாகியுள்ளார் இலங்கை தமிழரான கெரி ஆனந்தசங்கரி. ஆளும் லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்ட கெரி ஆனந்த சங்கரி, இந்த தேர்தலில் 62.3 சதவீத வாக்குகள் பெற்று வென்றுள்ளார். அவரை எதிர்த்து கன்சர்வேடிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட லெஸ்லின் லூயிஸ் மற்றும் கனேடிய தமிழரான என்.டி.பி கட்சி வேட்பாளர் காந்தரட்ணம் சாந்தகுமார் ஆகியோர் போட்டியிட்டுள்ளனர்.



சென்ற முறை 2015ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 34.8 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற கெரி ஆனந்த சங்கரி இப்பொழுது 2019ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், அதே தொகுதியில் 62.3 சதவீத வாக்குகளை பெற்று, அபார வெற்றி பெற்றுள்ளார்.

கனடாவில் தமிழ் இளைஞர்களை நெறிப்படுத்த, இளைஞர்கள் சேவை நிலையமொன்றை அவர் ஆரம்பித்து, கனடாவில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக முன்னின்று செயற்படுபவராக கெரி ஆனந்தசங்கரி திகழ்கின்றார். கனடா தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளிலும் அவர் பெரும் பங்களிப்பை வழங்கி வருகிறார். அத்துடன், கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அமைப்பின் வளர்ச்சிக்காகவும் அவர் முன்னின்று செயல் பட்டு வருகிறார்.

கனடாவில் வழக்கறிஞராக செயற்பட்ட கெரி ஆனந்தசங்கரி, பின்னர் சிறந்த அரசியல்வாதியாகவும் பெயரெடுத்துள்ளார். லிபரல் கட்சியின் வளர்ச்சிக்காக செயற்பட்டவர்களில் கெரி ஆனந்தசங்கரிக்கு பெரிய பங்களிப்பு உள்ளதாக கூறப்படுகின்றது. கனடாவில் இந்த முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி, நான்கு தமிழர்கள் போட்டியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதில் அபாரமான வெற்றி பெற்றுள்ள கேரி ஆனந்த சங்கரியின் மூலமாக புலம் பெயர் தமிழர்கள் மேலும் நன்மைகளைப் பெறுவர்கள் என்பதில் ஐயம் இல்லை. திரு. கேரி அனந்த சங்கரியின் வெற்றிக்குப் பாராட்டுக்கள்.

வாழ்த்துக்கள்.

*(வளரும்)*

# கனடாவில் மார்க்கம் நகரில் தீப்பற்றிய வீட்டின் உள்ளே 12 வயதுடைய சிறுவனின் உடல்பாகங்கள் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன





கடந்த 17ம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை, காலை 10:30 மணிளவில் மார்க்கம் நகரில் உள்ள வீடொன்று திடீரென தீப்பற்றி எரிந்த போது, அந்த வீட்டுக்குள் தாயார் மற்றும் மூன்று பிள்ளைகள் ஆகியோர் இருந்துள்ளனர். அவர்களில் 12வயது சிறுவனைத் தவிர ஏனைய மூவரையும் மீட்டெடுத்த தீயணைப்பு படையினர் உடன-டியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனாலும் அந்த மூன்று பேரின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ள நிலையில் சம்பவம் நடத்திற்கு சென்ற பொலிசாரும் தீயணைப்பு படையினரும் மேற்படி 12வயதுடை-டய சிறுவனுக்கு என்ன நடந்தது என்பதை அறியக் கூடியமாக இருக்கவிலலை. மிகவும் மோசமான நிலையில் எரிந்து காணப்பட்ட அந்த வீட்டில் நிலத்தின் கீழ் உள்ள தளம் மற்றும் எனைய இடங்களுக்கு சென்று பார்க்க முடியாத அளவிற்கு வீட்டின் எரிந்த பகுதிகள் இடிந்து கீழே விழும் நிலையில் காணப்பட்டதால், பொறியியலாளர்கள் அழைக்கப்பட்டு பின்னர் பாரிய இயந்திரம் ஒன்று கொண்டுவரப்பட்டு வீட்டின் உள்ளே எரிந்த பகுதிகள் ம்ற்றும் ஆபத்தான பகுதிகள் ஆகிய கிளறப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன.

அப்போது மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது வீடு எரிந்து கொண்டிருந்த போது தீயணைப்பு படையி-னரின் கண்களில் அகப்படாமல் போன அந்த சிறுவனின் உடற் பாகங்கள் எரிந்து கருகிய நிலையில் வீட்டின் நிலக்கீழ் தளத்தில் காணப்பட்டதாகவும் பொலிசார் தெரீவத்துள்ளனர்.

மேற்படி வீடாது தீப்பற்றி எரிந்த போது, அந்தக் குடும்பத் தலைவனான கணவர் வெளியில் சென்றிருந்ததாகவும், அதனால் அவர் தனது வீடு தீப்பற்றியதை அறிந்து உடனடியாக அந்த இடத்திற்கு வந்ததாகவும் பொலிசார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்கிய உதவிக்கு நன்றி நவிலல்

இன்று உலகமே தத்தளித்து செயலற்று தவித்துக் கொண்டிருக்கும் இக்கட்டான இச்சூழ்நிலையில் மனித நேயத்துடன் உணர்வலையோடு முன்வந்து உதவியளிப்பது, உதவிக்கரம் நீட்டுவது இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே!

"கொரோனா" என்ற அழையா அசுரன் விஸா இன்றி விஸ்வ வித்தைகள் பல அரங்கேற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் புலம்பெயர்வாழ் எமது உறவுகள், அகதிகள் என்கின்ற அந்தஸ்தினையும், வேதனைகளையும் மறந்து, பல சிரமங்களுக்கு மத்தியிலும் "தானாடாவிட்டாலும் தன் சதை ஆடும்" என்ற கூற்றுக்கேற்ப, எமது தாயக மண்ணின் மைந்தர்களுக்கு தம்மால் இயன்றளவு உதவ வேண்டும் என்ற உணர்வோடு செயற்பட்ட (கனடா, சுவிஸ், ஐக்கிய இராஜ்ஜியம், ஜேர்மனி, பாரிஸ், அமெரிக்கா) போன்ற நாடுகளில் உள்ளவர்களுக்கு தலைவணங்குகின்றோம். பார்வையாளராக இல்லாது பங்காளியாக செயற்பட்டு காவலூர் கரம்பொன் சாத்தையம்பதி, ஸ்ரீ காளிகாபுவனேஸ்வரி சார்பாக பணமாகவும் உலர் உணவுப் பொருட்களாகவும் எமது கரம்பொன் வாழ் தொண்டர்களால் வாகன மூலம் வீடு வீடாகச் சென்று வழங்கப்பட்டது இதன் பெறுமதி கிட்டத்தட்ட ரூபாய் 70900/=.

அத்தோடு எமது கிராமப் பற்றாளர் அமரர் திரு. குருசாமி அவர்களின் முத்த புதல்வி அமரர் தில்லைநாயகி கந்தசாமி அவர்களின் நினைவாக மற்றைய சகோதரிகளின் ஏற்பாட்டில் இருபத்தைந்து (25) துவிச்சக்கர வண்டிகள் கிராம மட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

தவிர தங்களது சொந்தப் பணத்தில் உலர் உணவுப் பொதிகள், மட்டுமல்லாது காணியற்றோருக்கு இரண்டு பரப்புக்காணி வீடு கட்ட பகிர்ந்தளிக்கப்பட்டது, யுவதிகளின் எதிர்கால விடிவிற்கு சுயதொழிலில் ஈடுபட இலவச பற்றிக் தொழிற்பட்டறையை நெறிப்படுத்தி தன்நம்பிக்கையோடு நல்லதொரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வோடு இயங்கிக் கொண்டிருக்கும் சகோதரிகள் தலைவி, சமூகசேவகி செல்வி சோதி மற்றும் நன்கொடை வழங்கிய எமது வெளிநாட்டு உறவுகளுக்கும் உதவி நல்கிய கோயில் தொண்டர்களுக்கும் கனடாவை தலைமையாகக் கொண்டிருக்கும் அன்புள்ளங்களோடு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**"சர்வதேச கரம்பொன் ஒன்றியம்" (கனடா) பணிமனை**

தகவல்:- மு. சிதம்பரநாதன்



Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2


Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

மலேசிய மடல்:

# அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்



அரசியலில் தவறு இழைப்போரை அறமே கூற்றுவனாகி தண்டிக்கும் என்று ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் தெளிவாக உரைக்கிறது. சங்க காலத்தில் இறைவன் அல்லது மன்னனையோத்தான் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெரும்பாலான இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. ஆனால், கணியனின் (சோதிடனின்) கூற்றை பொய்யாக்கி துறவறம் பூண்ட சேர இளவரசனான இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரம்தான், கோவலன் என்னும் சாதாரண வணிகக் குடிமகனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது.









அந்தக் காப்பியத்தில் பாண்டிய மன்னன், தன் மனைவியின் கால் சிலம்பு காணாமல் போன வழக்கு குறித்து முறையாக ஆராயாமல் தீர்ப்பு வழங்கியதால், பிழைப்பு தேடி வந்த கோவலன் கொல்லப்படுகிறான். அதன் விளைவாக, நெடுஞ்செழிய பாண்டிய மன்னனும் அவனது இல்லாள் கோப்பெருந்தேவியும் அரச சிம்மாசனத்தில் இருந்தவாறே மாள நேரிட்டது. அப்படியும் வஞ்சம் தீராத கண்ணகி, பாண்டிய மன்னனின் அரச நகரான மாமதுரை நகரையை தீக்கிரையாக்கினாள். அதற்கு, அந்த மாதரசியின் கற்பு வலிமை துணை நின்றதாக அந்தக் காப்பியம் சொல்கிறது.

அதைப் போல மலேசிய அரசியலில் சுயநல அரசியலையும் வஞ்சக அரசியலையும் அப்பட்டமாக மேற்கொண்ட துன் டாக்டர் மகாதீர் முகமது தானும் பிரதமர் பதவியை இழந்து, தன் மகனும் மாநில முதல்வர் (மந்திர் புசார்) பதவியை இழக்கக் காரணமாகி விட்டார்.

இந்த இடத்தில்தான் தத்துவ மேதை, பொறியியலாளர், தலைசிறந்த புலவர், தமிழின ஒற்றுமையை முன் மொழிந்த முதல் இலக்கியவானர் (சிலப்பதிகார பெருங்காப்பியத்தை சோழ நாட்டில் தொடங்கி, பாண்டிய நாட்டில் தொடர்ந்து சேர நாட்டில் நிறைவு செய்து, தமிழ் மக்களின் ஒற்றுமையை மறைமுகமாக வலியுறுத்தியுள்ளார் இலக்கிய கோமான் இளங்கோ அடிகள்), அறம் வளர்த்த அரன்மனைவாசி, துறவற வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர், அரண்மனை வாழ்வை துச்சமெனக் கருதி மக்கள் நலம்பாடி வீதி உலா வந்த தமிழவேள் என்றெல்லாம் இன்னும் ஏராளமான பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் பொதிய வைத்துள்ள அர(ரை)சியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் சொற்றொடரை ஒப்பு நோக்க வேண்டி இருக்கிறது.

மலேசியத் திருநாட்டிலும் அப்படி அறம் பிழறிய அரசியலை தொடர்ந்தும் வல்லடியாகவும் மேற்கொண்டதனால் காலமகள் இரண்டவது முறையாக வழங்கிய பிரதமர் பதவியை தேவையின்றி இழந்ததுடன் தன் மகன் டத்தோஸ்ரீ முக்ரிஸ் மகாதீரும் பதவியை இழக்கக் காரணமாகி விட்டார் அவர். எல்லாவற்றுக்கும் மேலாக, அவர் தலைமைப் பொறுப்பு வகித்த பிரிபூமி கட்சியிலும் அவருக்கு இனி எந்தப் பொறுப்பும் இல்லையென்று தேசிய சங்கப் பதிவகம் இப்போது அறிவித்துள்ளது.

மலேசியா சுதந்திரம் அடைந்தது முதல் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தேசிய முன்னணி என்னும் அரசியல் கூட்டணிதான் நாட்டை தொடர்ந்து ஆண்டு வந்தது.

அந்த வகையில் அரசியல் சரித்திரம் படைத்தது மலேசியாவின் தேசிய முன்னணி. அந்தக் கூட்டணியை வழிநடத்தியதுடன் நாட்டில் அரசியல் நிலைத்தன்மைக்கு வழிவகுத்த மலாய் இனக் கட்சியான அம்னோ, உலக அரசியல் வரலாற்றில் சாதனைப் படைத்தது என்றால் அதில் மிகை இல்லை. உலகில், எந்த அரசியல் கூட்டணியும் ஒரு நாட்டை தொடர்ந்து அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை.

மலேசிய இந்தியர்களின் தாய்க் கட்சியான மலேசிய இந்தியர் காங்கிரசும் அறுபது ஆண்டுகளாக அதிகாரக் கட்டிலில் பங்காளித்துவம் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2018 மேத் திங்கள் 09-ஆம் நாள் நடைபெற்ற நாட்டின் 14-ஆவது பொதுத் தேர்தலில் மக்கள் மாற்றத்தை விரும்பி, தேசிய முன்னணிக்கு விடை கொடுத்து நம்பிக்கைக் கூட்டணி என்னும் புதிய அரசியல் அணியை ஆட்சி பீடத்தில் அமர்த்தினர்.

பொருள் விலையேற்றம், லஞ்சம் ஆகிய இரு அம்சங்களை வெறுத்த மலேசிய வாக்காளர்கள் பெரிய நம்பிக்கையுடன் புதிய ஆட்சிக்கு வழிவகுத்தனர். ஆனால், புதிய ஆட்சிக்கு தலைமையேற்றவரும் பிரதமருமான மகாதீர் முகம்மது, தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி செய்வதற்கு மாறாக முன்னுக்குப் பின் முரணாக பேசவும் செயல்படவும் ஆரம்பித்தார்.

பொது மக்கள் எதிர்கொண்ட அடையாள ஆவண சிக்கல், சாலைப் போக்கு-வரத்து சுங்க வரியை அகற்றுதல், உயர்க்கல்வி மாணவர்கள் எதிர்கொண்ட கடன் பிரச்சினை, விற்பனை சேவை வரி உள்ளிட்ட எத்தனையோ சிக்கல்களை தீர்ப்பதற்குப் பதிலாக.. ..,

நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்று நினைக்கவில்லை. அதனால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளித்து விட்டோம் என்றும் தேர்தல் கால வாக்குறுதி என்பது பைபிள் அல்ல என்றும் நாட்டின் நிதி நிலைமை இந்த அளவிற்கு மோசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை என்றெல்லாம் பேசி மக்களை ஏமாற்றமான மனநிலைக்கு ஆளாக்கினார்.



நக்கீரன்

அதைவிட, நம்பிக்கைக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றினால் நான் இரண்டு ஆண்டுகளுக்குத்தான் பதவியில் நீடிப்பேன் எனக்கும் வயது 90-க்கும் மேலாகி விட்டது அதனால் ஈராண்டுகளுக்குப் பின் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிமிடம் பதவியை ஒப்படைப்பேன் என்று தேர்தல் காலத்தில் நறுக்கென்று சொன்ன மகாதீர், பதவிக்கு வந்ததும் அன்வாரிடம் பதவியை ஒப்படைப்பதற்குப் பதிலாக ஏதேதோப் பேசி வந்தார். வாய்ப்பு ஏற்படும்பொழுதெல்லாம் அன்வாரை மறைமுகமாக சாடியும் வந்தார்.

இப்படி நிலையில்லாத ஆட்சியாகவும் எந்த நேரமும் சண்டை ஓயாத அரசியல் பிணக்கு நிறைந்த ஆளுந்தரப்பாகவும் மக்களுக்கு சலிப்பையும் அலுப்பையும் தரக்கூடியதாக நம்பிக்கைக் கூட்டணி ஆட்சி நீடித்த நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் 21-ஆம் நாள் நம்பிக்கைக் கூட்டணியில் இடம்பெற்று நான்கு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பிரதமர் பதவி மாற்றம் தொடர்பான ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும்படி மகாதீரை மற்ற மூன்று கட்சிகளின் தலைவர்களும் வலியுறுத்தினர். இதை மகாதீரால் ஜீரணிக்க முடியவில்லை.

அதற்கு அடுத்த நாள் முதல் மலேசிய அரசியல் கொந்தளிக்கத் தொடங்கியது. மகாதீர் தலைமை வகித்த பிரிபூமி கட்சி ஆளும் கூட்டணியில் இருந்து விலகியது. மகாதீரும் பிரதமர் பொறுப்பில் இருந்து விலகினார். அவர் பதவி விலகியதை அடுத்து ஒருவேளை அன்வார் பிரதமர் ஆகிவிடுவாரோ என்ற அச்சத்தில் ஆளுந்தரப்பின் பெரும்பான்மையைக் குறைக்கும் விதமாகத்தான் மகாதீர் தலைமை ஏற்றிருந்த கட்சி ஆளும் அணியில் இருந்து விலகியதா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

ஆனால், மகாதீரையும் அவரின் மகனையும் தவிர அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் எல்லாம் எதிரணியுடன் சேர்ந்து புதிய அணியைத் தொடங்கி, அந்த அணியின் சார்பில்தான் தற்பொழுது அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

பிரிபூமி கட்சியில் மகாதீருக்கு அடுத்த நிலையில் இருந்தத் தலைவரான டான்ஸ்ரீ முகைதீன் யாசின்தான் இப்பொழுது நாட்டின் எட்டவது பிரதமராக இருக்கிறார். ஆனால், மக்கள் அளித்தத் தீர்ப்புக்கு மாறாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் அணி தாவியதன் விளைவாக கொல்லைப்புற ஆட்சியை அமைத்துள்ளதாக மக்களிடையே கருத்து நிலவுகிறது.

இதில், வேடிக்கை என்னவென்றால், இரு வருடத்திற்குள் மத்திய ஆட்சியும் மூன்று மாநில ஆட்சிகளும் மாறுவதற்கு காரணமாக இருந்த பிரிபூமி கட்சி, இன்னமும் நம்பிக்கைக் கூட்டணியில் இருக்கிறது என்று, இப்பொழுது மகாதீர் சொல்வதுதான்.

முன்னதாக 22 ஆண்டுகள் தேசிய முன்னணி சார்பில் பிரதமராக நாட்டை வழிநடத்திய இதே மகாதீர், 2003 அக்டோபர் 31-ஆம் நாள் பதவி விலகியபோது இவருக்குப் பின் அன்வார் பிரதமர் ஆகாதபடி எல்லா ஏற்பாட்டையும் செய்துவிட்டு துன் அப்துல்லா படாவியிடம் பிரதமர் பொறுப்பை ஒப்படைத்தார்.

ஐந்தாவது பிரதமரான படாவி, மகாதீரின் விருப்பப்படி செயல்படவில்லை என்பதால் அவரை நிம்மதியாக ஆள விடாமல் தொடர்ந்து அரசியல் சலசலப்பு செய்து வந்த மகாதீர், 2009 ஏப்ரல் 3-ஆம் நாள் நாட்டின் ஆறாவது பிரதமராக பதவி ஏற்ற டத்தோ நஜீப் துன் ரசாக்கையும் நிம்மதியாக நாட்டை வழிநடத்தி விடவில்லை.

மலேசிய தேசிய அரசியல் நீரோட்டம் மாறிய நிலையில், எதிரணி சார்பில் இதே மகாதீர் மீண்டும் ஏழாவது பிரதமராக வந்த பின்னும் நாட்டில் அரசியல் சலசல்ப்பிற்கு பஞ்சமில்லாமல் இருந்தது.

2003-இல் மகாதீர் பிரதமர் பொறுப்பில் இருந்து விலகியபோது அன்வார் சிறையில் இருந்தார். அதைப்போல 2018-இல் ஏழாவது பிரதமராக இவர் பொறுப்பு ஏற்றபோதும் அன்வார் சிறையில் இருந்தார்.

இப்பொழுது எட்டாவது பிரதமரையும் நிம்மதியாக ஆட்சி செய்யவிட மாட்டார் போலத்தெரிகிறது. அதேநேரத்தில் ஆட்சியை அநியாயமாகப் பறிகொடுத்து விட்டு கடந்த மூன்று மாதங்களாக எதிரணியாக மாறி இருக்கும் நம்பிக்கைக் கூட்டணியிலும் புகுந்து கொண்டு அந்த அணியிலும் இரண்டகம் செய்து கொண்டு எப்படியாவது அன்வாரை காலை வாரிவிடுவது என்ற குயுக்தி மனப்பான்மையில் இருக்கிறார் மகாதீர்.

அன்வார் இப்ராகிம் பிரதமர் பதவியை அடைந்துவிடக்கூடாது என்ற ஒற்றை இலக்கில் கடந்த கால் நூற்றாண்டாக வஞ்சக அரசியல் புரிந்து வருகிறார் மகாதீர். அரசியலில் தான் உயர வேண்டும் என்பதைவிட, அடுத்தவரை அடி அறுக்க முனையும் வஞ்சக அரசியல், இரு பக்கமும் கூர்மையான கத்தியைப் போன்றது.

அதனால்தான் தானும் பதவி இழந்து, தன் மகனின் மாநில முதல்வர் பதவியையும் துறந்து, கட்சிப் பொறுப்பும் இன்றி தனி மரம் என்னும் நிலைக்கு ஆளாகிவிட்டார் மகாதீர்.

அவர் இனியும் தன்னை மாற்றிக் கொள்ளாவிட்டால் இருக்கின்ற மற்றதையும் இழக்க நேரிடும்.

இதுதான் சிலம்பு காப்பியம் சொல்லும் அரசியல் நியதி!!.

- நக்கீரன்

நக்கீரன் - யேமமநநசயடு 013-244 36 24

*அடுத்த வாரம் சந்திப்போம்.*


PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!
RE/MAX
Thornhill Trails Towns
The Remington Group
Artistry Condos
Tribute Communities and Greybrook Realty Partners
SkyTower Condos
Pinnacle International
NO55 Mercer Condos
CentreCourt Developments Inc.
Frenchman's Bay Towns 2
Madison Group
Prestige Condos
Pinnacle International
MontVert North Condos
Edenn Towns
Treasure Hill Home Corp
Notting Hill Condos 3
DunWest Condos
Greenpark Homes
DunWest Condos
Greenpark Homes
Trendi Towns
Treasure Hill Home Corp
Artistry Condos
Tribute Communities and Greybrook Realty Partners
Nahid on Broadview
KSquare Condos
Frenchman's Bay Towns 2
Madison Group
The Belmont Residences 2
Esa Towns
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


STEELES PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம்
தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும்,
சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி
வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு
மருத்துவப் பட்டதாரி (Podiatry).
Compression Level
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)


MEGA Financial Group
Ruban Lingam
Insurance Agent
Call:647-928-5626
PH28 - 4168 Finch Ave, East
Scarborough, ON M1S 5H6
Web: www.rubanlingam.com
Email: rubanlingam@hotmail.com

தமிழ் பேசும் இளம் சட்டத்தரணியான
அரவிந் ஜெகதீசன் அவர்களை
அழைப்பதன் மூலம் உங்கள்
வழக்குகள், தொழில் சம்பந்தமான பிரச்சனைகள்,
வீட்டு உரிமையாளர்கள் - குடியிருப்பாளருக்கு
இடையிலான வழக்குகள் ஆகியவை தொடர்பான
ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
437.229.9643

- Employment Law
- Severance Packages
- Landlord and Tenant Law
- Wrongful Dismissal
- Human Rights
- Employment Standards

Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
email: ara@aravinthlaw.ca www.aravinthlaw.ca
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3C1

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative

HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705



23rd Years in Publishing

# UTHAYAN உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703



NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)

Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON)
PARK PLAZA TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519



உதயம் 1259 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 22, 2020


## "Nothing is more important than protecting our kids in this province."

**- Ontario Premier Doug Ford**

# எமது மாகாணத்தின் குழந்தைகளைக் காப்பாற்றுவதைத் தவிர அதி முக்கியமானது வேறொன்றும் இல்லை

**-ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்**



மிகவும் நெருக்கடியான "கொரோனாவின்" தாக்கத்தால் தவிக்கும் எமக்கு, எம்மோடு கூடவே இருக்கும் இந்த ஒன்றாரியோ மாகாணத்தின் குழந்தைகளைக் காப்பாற்றுவதைத் தவிர அதி முக்கியமானது வேறொன்றும் இல்லை. எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் தான் எமக்கு முக்கியமானதொன்றாகும். எனவே அவர்கள் வீட்டிலிருந்தே தங்கள் பாடங்களைக் கற்றுக்கொள்ளட்டும். அவர்கள் மிகவும் பாதுகாப்பாக இருக்கட்டும் என்றே நானும் எனது அமைச்சரவையும் தீர்மானித்துள்ளோம்"

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள். நேற்று முன்தினம் ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்" வளாகத்தில் இணையவழி ஊடாக ஊடகவியலாளர்களோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டும், அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தும் ஒன்றாரியோவின் கல்வி அமைச்சர் மற்றும் பிரதான அமைச்சர்கள் சிலரோடு கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் "எமது மாகாணத்தில் உள்ள சிரேஸ்ட சுகாதார அதிகாரிகளோடும் சுகாதார அமைச்சரோடும் கல்வி அமைச்சரோடும் கலந்துரையாடிய பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் ரொரன்ரோவில் உள்ள சிறுவர் மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளும் இந்த விடயத்தில் மிகவும் பொறுப்பு வாய்ந்த முறையில் செவிமடுக்கப்பட்டுள்ளன. எனவே ஒன்றாரியோவில் உள்ள பாடசாலைகளை உடனடியாக மீளவும் திறக்கும் எண்ணம் எமக்கு இப்போது இல்லை. அதற்குப் பதிலாக பல தொண்டு நிறுவனங்களின் உதவிகளுடனும் ஆலோசனைகள் வழங்கும் நிறுவனங்களின் உதவியோடும் எமது பிள்ளைகளுக்கான வேறு கற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது உள்ள கோடை காலம் முடிவிற்கும் வந்ததும் நாம் எமது பிள்ளைகள் தொடர்பான விடயங்களை மீண்டும் ஆராய்வோம். அவர்களது சுகாதாரத்திற்கும் உடல் நலத்திற்கும் பாதிப்புக்கள் வரா வண்ணமும் அவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பாகவும் நாம் கவனஞ் செலுத்தவும் உள்ளோம்.

இந்த இடைப்பட்ட காலத்தில் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களை மிகுந்த கட்டுப்பாடுகளின் மத்தியில் இயங்குவதற்கு அனுமதியை வழங்குவதற்கும் நாம் ஆராய்ந்து வருகின்றோம். இதனால் அங்கு கூட சிறுவர்கள் மற்றும் சிறுமியர் தங்கள் கல்விச் செயற்பாடுகளை ஓரளவு மேற்கொள்ள வசதிகள் கிட்டும் என்றும் நம்புகின்றோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரொரன்ரோ நகரின் ஹோட்டல் ஒன்றை வசிப்பிடமற்று தனியாக வாழும் பெண்களுக்காக ஏற்பாடு செய்துள்ள மாநகரசபை



ரொரன்ரோ நகரின் ஏரிக் கரையோரமாக அமைந்துள்ள தனது ஹோட்டல் ஒன்றை வசிப்பிடமற்று தனியாக வாழும் பெண்களக்காக ரொரன்ரோ மாநகரசபை நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. கடந்த மாதத்தில் 16வயதுக்கு மேற்பட்ட சுமார் 35 பெண்கள் 348 டெவன்போரட் வீதி என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ஒரு காப்பிடத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அங்கு போதிய வசதிகள் இல்லாதபடியாலும் பொதுவான குளியல் அறைகள் மற்றும் மலகூடங்களே அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததாலும் மேற்படி பெண்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகியிருந்ததாக ரொரன்ரோ மாநகரசபையின் நிர்வாகத்தினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வைக் காணும் முகமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பலனாக 1684 குயின்ஸ் வீதி கிழக்கும் என்னும் விலாசத்தில் அமைந்திருந்த Days Inn என்னும் ஹோட்டலை ரொரன்ரோ மாநகரசபை நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஹோட்டலில் தனியாக அறைகளுக்கும் ஏனைய வசதிகளும் உள்ளதால் வசிப்பதற்கு தகுந்த இடங்கள் தவித்த பெண்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளதாக அறியப்படுகின்றது. இதனால் தற்போதைய 'கொரோனா' தொற்று தொடர்பாக அச்சம் இந்த பெண்களுக்கு இருக்காது என்று மாநகரசபையின் அதிகாரி ஒருவர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்த நற்காரியம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ரொரன்ரோ நகரத்தில் இயங்கும் லுறுஊயு நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஹித்தர் மெக்கிறேகொர் " இந்த பெண்கள் விடயத்தில் ரொரன்ரோ மாநகர சபை மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளுத என்றே நான் கூறுவேன். புாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்போது தகுந்த நிவாரணம் கிடைத்துள்ளது' என்றார்.


Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.

RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074
